436

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

OFFICE OF ... OF BOOKS
23 OCT 1956
436
4-56
1579

வேங்கட கிருஷ்ணன்

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	226
2.	செய்திகள்	228
3.	நல்லோர் ஸந்திப்பு [ஸ்ரீவத்ஸன்]	229
4.	கண்ணனாக வந்த வேங்கடவன் [ஸ்ரீ. உப. பாதூர் ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவுள்ளூர்.]	232
5.	ஹம்ஸஸந்தேசம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A., B. L. அட்வோகேட், திருச்சி.]	233
6.	திருவஷ்டாக்ஷரத்தைப் புகழும் திருமங்கையர்கோன் [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	236
7.	பண்டைக்காலத்திய குருகுலமுறை [ஸ்ரீ. உப. அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீஅஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	238
8.	மஹான்களின் மஹிமை [ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர் வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]	241
9.	கண்ணனும் கீதையும் [ஸ்ரீ. உப. வித்வான், மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]	244
10.	பெரியார்க்காட்பட்டக்கால் பெறுத பயன் பெறும் [ஸ்ரீ. உப. ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, ஹைதராபாக்கம்.]	248
11.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	253

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ஹூ புரட்டாசி மீ { ஸஞ்சிகை 9

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

210732.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறவேண்டுமானால் அறிவும் ஆற்றலும் மிகவும் அவசியம். பகவத் காலப்போக்கு ஸ்ருஷடியில் மனிதனுக்கே அறிவு அதிகம். பிராணிகளுக்கும் பகுத்தறிவு உண்டு. ஆயினும் அறிவுக்களஞ்சியம் எனக் கூறலாம் மனிதனை. மனிதர்களுக்குள் அறிவில் தாரதம்யங்கள் காணப்படுகின்றன. அது அவரவர்களுடைய பூர்வஜன்மஸுக்ருதவிசேஷத்தினால் ஏற்பட்டது பூர்வஜன்மஸுக்ருதம் என நம் முன்னோர்கள் கூறிவந்ததை ஒப்புக்கொள்ளாத நவீனத்தவர்கள் ஒவ்வொருவனுடைய கார்யத்திற்கும் காரணமான ஓர் மனோவ்ருத்தி அவனிடம் ஸூக்ஷ்மதசையில் இருப்பதாகக் கூறுவர். இந்த ஸூக்ஷ்மாவஸ்தையில் இருக்கும் மனோவ்ருத்தியை ஒரே தசையில் எல்லோரிடமும் காண முடியாது என்றும் கூறுகின்றனர். இதனால் தான் மனிதஸ்வபாவமாறுபாடுகள் காணப்படுகின்றன. இப்படியில்லையெனில் ஒரே சூழ்நிலையில் உள்ள பல்வேறு குழந்தைகளும் ஒரே மாதிரியான மனோவளர்ச்சியில் காணப்படுவதில்லை என்பதற்குக் காரணம் கூறமுடியாது. ஆகவே அறிவில் பூர்வகர்மானுகுணமாக நமக்குள் தாரதம்யம் ஏற்படுவதுபோல ஆற்றலிலும் தாரதம்யங்கள் காணப்படுகின்றன.

இம்மாதிரியான தாரதம்யங்களை அறவே ஒழிக்கவேண்டும் என நினைப்பவன் இயற்கை விரோதியாகிறான். இயற்கையை எதிர்த்துப் போராடுபவன் வெற்றி பெறமுடியாமல் நசிக்கிறான். ஆனால் நாம் செய்யக்கூடியது என்னவெனில், செயற்கையினால் ஏற்பட்ட மாறுபாடுகளை, மாற்றியமைக்க முயற்சிக்கலாம். ஓரளவு வெற்றியும் பெறலாம். செயற்கை மாறுபாடுகளை மாற்றியமைப்பதில் நாம் ஓரளவு வெற்றி பெறுவதென்பது நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் அளவைப் பொருத்ததாகும். **'उद्यमेनैव सिध्यन्ति कार्याणि न मनोरथैः'** நமது முயற்சியினால்தான் நாம் வெற்றி பெறலாமேயன்றி ஸங்கல்பத்தினால் அல்ல என்பது நமது ஜ்ஞாபகத்திலிருக்கவேண்டிய விஷயம். ஸங்கல்பமாத்ரத்தில் உலகஸ்ருஷ்டிபோன்ற எக்கார்யத்தையும் ஸாதிக்கும் திறன் ஸர்வேச்வரனுக்குத்தானுண்டு. நமக்கல்ல.

ஸமீபகாலத்தில் ஏற்படுகிற பல ஸம்பவங்களைக் குறித்து நாம் பர்யாலோசனை செய்யுங்கால் நாம் நமது ஸமூஹத்தைக் காப்பாற்ற வேண்டி எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் கணக்கிட்டுப் பார்க்கவேண்டியிருக்கிறது.

பொருளாதாரத் துறையிலேயே ஊறிக்கிடக்கும் படித்தவர்களையும், பாமரர்களையும் தன் வசமாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சில அறிவாளிகள், ஜன்மாந்தரீய ஸம்ஸ்காரங்களின் காரணமாய் பல்வேறு துறைகளில் இறங்கிப் பாடுபட்டுவருவதை நாம் காண்கிறோம்.

உலகஸுகத்திற்காகப்பாடுபடுபவர்கள் தனக்காக அல்லாமல் பிறர்க்காகப் பாடுபடுகிறார்கள் என்பது உண்மையே. ஆயினும் ஆத்மானந்தத்தையும் புறக்கணித்து, ஸமூஹத்திலுள்ள சில பிரிவினரின் நலனையும் மனதிற்கொள்ளாமல், ஜனநாயகம் என்ற முறையில் பெருவாரியான மக்கள் பொருளாதாரத்துறையில் வெற்றி பெறவேண்டும் என்று பாடுபடுவது எவ்வளவு ந்யாய்யமான முறை என்பதை மத்யஸ்தர்களான அறிவாளிகள்தான் யோசித்துப்

பார்க்கவேண்டும். 'பசுவைக் கொன்று செருப்பு தானம்' செய்வதென்னும் கூற்றை நாம் கேட்டதில்லையா?

நமது பண்டைஸமூஹத்தினரின் ஒவ்வொரு வைதிக, லௌகிக கார்யங்களை நாம் பர்யாலோசனை செய்தால் உண்மையான ஜனநாயகமுறை புலனாகும். வைதிக கர்மாக்களில் ஈடுபடுபவர் சிலர். ஆனால் அதன் பலனை அனுபவிப்பவர் பலர். ஓர் தேவாலய உத்ஸவத்தை எடுத்துக் கொள்வோம். பகவதலங்காரத்திற்கு உபயோகப்படும் புஷ்பம், தீபத்திற்கு வேண்டிய எண்ணெய், நிவேதநத்திற்கு வேண்டிய தான உணவுப் பொருள்கள் இவைகளையெல்லாம் கொடுப்பவர்கள் பெருவாரியான லாபத்தையடைகிறார்கள். பிறகு பகவானை ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணும் கைங்கர்யபரர்களுக்கும் ஊதியம் கொடுக்கப்படுகிறது. இடையில் மேளகாரர்கள், வாணவேடிக்கைகள் இவைகளுக்கென்று ஏராளமான பணம் செலவு செய்பவர்களுமுண்டு. ஆகவே தொழிலாளிகளும், உழைப்பாளிகளும் பெருவாரியான செலவு தொகையிலிருந்து வரும் லாபத்தைப் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். இப்படியிருக்க தேவாலயங்களினால் ஓர் குறிப்பிட்ட வகுப்பினரே லாபத்தையடைகிறார்கள் என்பது எவ்வளவு மதியீனமான சொல்.

இது நிற்க தேவாலயங்களுக்கு ஏராளமான பூஸ்திதி இருப்பதாகவும் அவைகளுக்சென்று நிலதானம் செய்வது பிழையென்றும், அவ்விதம் செய்யாமல் நிலங்களை நிலமில்லாதோர்க்கு பங்கிட்டுக் கொடுப்பதே ந்யாய்யமென்றும் கூறும் பெரியார்களைக்கூட நாம் பார்க்கிறோம். தேவாலயங்களில் பெரிய திருப்பணிகள் நடப்பதினாலும், பெரிய உத்ஸவாதிகள் நடப்பதினாலும் பொது மக்களே பெரும் பயனை யடைகிறார்கள் என்பது கண்கூடு. அப்படிப்பட்ட தேவாலயங்களில் பூஜையையே நிறுத்திவிடக் கூடிய அளவுக்குப் ப்ரசாரம் செய்வார்களேயாகில் ஸமூஹத்திற்கு நஷ்டமில்லாமல் தனிப்பட்ட யாருக்கு நஷ்டம்? பண்டைகாலத்தில் அரசர்களும், ப்ரபுக்களும் பற்பல விதமான பண்டிதர்களையும், கலைகளையும் வளர்த்து வந்தனர். அரசர்களையும், ப்ரபுக்களையும் ஒழித்துவிட்டால் ஸமூஹத்திற்கு எவ்வளவு பெரிய நஷ்டம் என்பதை பலர் உணர்வதில்லை. சுயநலத்தையே கருதும் அரசர்களை உதாரணமாகக் காட்டி; ஓர் ஸ்தாபனத்தையே ஒழிப்பது ந்யாய்யமாகுமா? நாட்டு நன்மைக்குத்தான் உகந்ததா? இவ்விதம் ப்ரசாரம் செய்பவர்கள் நாட்டு நலனை மனதிற்கொண்ட பெரியோர்களே. சுயநலத்தைக் கணிசியாதவர்களும் கூட. ஆனால் வழி தெரியாது தடமாடுகிறவர்கள் என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

இம்மாதிரியான ப்ரசாரங்கள் நாஸ்திகர்களுக்கும் ப்ரயோஜனப்படுகின்றன. தேவாலயங்களையே நாசமாக்கவேண்டும் என எண்ணமுடைய அவர்கள் இப்ப்ரசாரங்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர். ஸமீபத்தில் தேவதா பிம்பங்களை உடைப்பதிலும், கடவுளின் படங்களை எரிப்பதிலும் ஈடுபடுமிவர்கள் சில சொற்பொழிவுகளில், 'புராதன பண்பாட்டில்' நடமாடிவரும் ப்ராஹ்மணர்களை அடிப்பதே தங்களுடைய அடுத்த போராட்டமாக இருக்கும் என்றுகூட கூறிவருகிறார்கள். உலகத்தோரால் புகழப்படும் ஜனநாயக அரசாங்கம்–மதச்சார்பற்ற அரசாங்கம் இம்மாதிரியான த்வேஷங்களை யூட்டும் ப்ரசாரங்களைத் தடை செய்யாமல் ஆதரித்தும் வருகிறதென்றால், நாட்டு நலன் எவ்வளவு சீர்கேடான நிலையில் பரிபாலிக்கப்பட்டுவருகிறதென்பது தெளிவாகும்.

துவேஷ மனப்பான்மையையே பரப்பிவரும் ப்ரசாரங்களைத் தடை செய்வது, ஜீவாதாரப் பேச்சு உரிமையைத் தடை செய்வதாக ஆகுமாம். என்னே ஜீவாதார உரிமை? என்னே ஜனநாயக உலகம்? இம்மாதிரியான ஜனநாயகம், ஜனங்களைக் காப்பாற்றுவதற்காக எவ்வளவு பாடுபடுகிறதென்பது நமக்கு நன்கு புலனாகிறது.

அரசியல் தத்துவங்களில் 'பெருவாரியோர் பிழை செய்வோர்' (The majority is always Wrong) என்ற ஓர் தத்துவம் உண்டு. அதாவது உலகில் ஜனங்களுக்கு நாயகனாக

இருக்கக்கூடிய ஸாமர்த்யத்தையுடையவர்கள் எண்ணிக்கைக்கு உட்பட்டவர்களே. அவர்களுடைய அறிவின் திறனால் ஜனங்கள் நல்ல ஆட்சியை அடைகின்றனர்கள். அப்படிக்கின்றி ஒவ்வொருடைய அபிப்ராயத்தையும் அனுஸரித்து அரசாட்சியை நடத்த முயற்சிப்போமேயாகில், நல்ல அரசாட்சியை ஏற்படுத்தவியலாது. நாம் எவ்வளவு வருந்தியும் வேண்டிய நற்பலனை அடையமுடியாது. ஆகவே நாம் செய்யவேண்டியது ஒன்றேதான். அதாவது:–

துவேஷப்ரசாரங்களை எதிர்த்துப் போராடுவதுதான். நாம் நம்முடைய வாழ்க்கையை சீர்ப்படுத்திக்கொள்வதுடன், நமது ஸமூஹ நலனைக் கெடுக்க முயற்சிக்கும் துவேஷிகளை, நமது ப்ரசாரங்களினால், தோற்கடிக்க வேண்டும். ஸந்தர்ப்பங்கள் நேரும்பொழுதெல்லாம் நமது உயர்ந்த நோக்குக்களை வெளிப்படையாக பலருக்குத் தெரிவித்து, நமது விரோதிகளின் சூழ்ச்சிகளையெல்லாம் அம்பலப்படுத்துவதவசியம்.

நாஸ்திகம் தலையெடுத்த காலங்களிலெல்லாம் நமது பூர்வாசார்யர்கள் இம்மாதிரியான முயற்சிகளால் எதிர்த்திருக்கிறார்கள். தங்களுடைய கொள்கைகளுக்காக ப்ராணத்யாகம் செய்யக்கூட அவர்கள் தயங்காமல் இருந்திருக்கின்றனர். ஸத்யத்தை அடிப்படையாகக்கொண்ட கொள்கைகளாயின் அவைகளை நிலை நிறுத்துவதற்கு அவர்கள் ஏன் தயங்கவேண்டும்? அவர்களைப்பின்பற்றிவரும் நாமும் அவர்களால்கூறப்பட்ட உண்மைகளை நிலைநிறுத்தப் பாடுபட வேண்டியது மிகவும் அவசியம்.

நமது கடமைகளைச் செய்வதில் நாம் பின் தங்கக்கூடாது. நமது ஸமூஹத்திற்குத் தற்காலம் ஏற்பட்டிருக்கும் ஓர் வருந்தத்தக்க நிலை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கிடையில் தான் தோன்றும். நமது முன்னோர்கள் அவைகளை ஸமாளித்திருக்கின்றனர். நாமும் மனந் தளராது அவைகளை எதிர்த்துப் போராடி ஸத்யம் எக்காலமும் ஜயிக்கும் என்ற உறுதியுடன், ஸதாசாரத்திலேயே ஈடுபட்டிருந்து ஸத்யத்தை நிலைநாட்ட முயற்சிக்கவேண்டும். "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்"

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை
மேலமாம்பலம்

8-8-56 அன்று மாலை 3-30 மணிக்கு ஸ்ரீ மாலோலசபையின் ஆதரவில் நமது பாடசாலையில் பிரார்த்தனை மண்டபத்தில் ஸ்ரீ ஆண்டாள் திருவவதாரவைபவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதலில் பாடசாலை மாணவிகள் பிரார்த்தனை கீதம் பாடினர். பின்னர் ஸ்ரீ. உ. வெ ராமானுஜ ஐயங்கார் ஸ்வாமி ஸ்ரீ ஆண்டாளுடைய திருவவதாரவைபவத்தைப்பற்றி சிறப்பாகப் பல விஷயங்களை எடுத்துத் தக்க சான்றுகளுடன் உபந்யஸித்தார்.

அவர் தமது உபந்யாஸத்தில் ஆழ்வார் என்ற சொல்லுக்கு விளக்கந்தந்து, அவர்களுள் பெரியாழ்வார் மேம்பட்டவரென்றும், அவருக்கு அச்சிறப்பு எப்படி வந்தது என்பதையும் வெகு அழகாக விளக்கிக் கூறினர். மேலும் அவர் பக்தியின் முறையைப்பற்றியும் பகவானது ஸௌலப்ய குணங்களைப் பற்றியும் கூறி அத்தகைய பகவானது அருளை நாம் பெற வேண்டுமானால் ஆழ்வார்களுடைய முறையைப் பின்பற்றுதலே சிறந்த வழியென்று கூறி முடித்தார்.

பின்னர் காரியதரிசி வந்தனோபசாரம் கூறியபின் மாணவர்களுக்கு சர்க்கரை வழங்கப்பட்டு சபை இனிது கலைந்தது.

ஐ. ஸ்ரீநிவாஸாசார்யர், ஹெட்மாஸ்டர்.

(தொடர்ச்சி 254-ம் பக்கம்)

ஸ்ரீ:

நல்லோர் ஸந்திப்பு

ஸுகுணன்:— நமஸ்தே. சென்ற மாதம் உன்னை ஸந்தித்தபிறகு கூடிய சீக்கிரத்தில் உன்னைப் பார்க்கவேண்டும் என்று எண்ணினேன். ஆகிலும் ஒரு மாதமாகிவிட்டது.

ஸுமித்ரன்:— இன்றாவது அவகாசம் கிடைத்ததைப்பற்றி ஸந்தோஷிக்கிறேன்.

ஸுகுணன்:— மித்ர! சென்ற மாதம் நாம் பேசியபோது நல்லோர்கள் தாங்கள் செய்த பூர்வவினைப்பயனை அனுபவிக்கின்றார்கள் என்று சொன்னாய். அதில் ஒரு ஸந்தேஹம். நம் பெரியோர்கள் நாம் சரணாகதி பண்ணிக்கொண்டால் எல்லா பாபமும் போய்விடுகின்றது என்று சொல்லுகின்றார்களே அது வாஸ்தவம்தானே? உண்மையில் சரணாகதி பண்ணிக்கொண்ட பெரியோர்களும் என் கஷ்டத்தையனுபவிக்கின்றார்கள்? — மேலும் சரணாகதி பண்ணிக்கொர்ண்டபிறகு பாபம் செய்தால் ‚கண் தெரியாது’ ‘காது கேட்காது’ புத்ரன் பார்யை முதலானவர்கள் விதேயர்களாக இருக்கமாட்டார்கள்’ என்றெல்லாம் சொல்லுகின்றார்கள். ஆனால் இதற்கு மாறாக சரணாகதி பண்ணிக்கொண்ட மறுதினமே ஒரு பாபமும் பண்ணாமல் இருக்கச் செய்தேயும் பார்யாபுத்ராதிகளால் பல கஷ்டங்களையனுபவிக்கின்றானே, ஏன்? பூர்வபாபம் தொலைந்து விட்டது. மறுதினம் பாபம் பண்ணவில்லை. ஆகையால் மறுதினம் கஷ்டத்தை அனுபவிப்பதற்குக் காரணத்தை விளக்கமாகச் சொல்லவேண்டும்.

ஸுமித்ரன்:— நீ கேட்டவைகளுக்கு விசதமாக பதில் சொல்லுகின்றேன் கேள். நீ நல்ல விஷயங்களைக் கேட்டிருக்கின்றாய். ஆனால் பூர்ணமாகக் கேட்கவில்லை. காலக்ஷேபம் பண்ணியவர்களுக்கு இந்த ஸந்தேஹம் உதிக்காது. சரணாகதி பண்ணிக்கொண்டால் ப்ராரப்தேதரமான — பலத்தைக் கொடுக்கவாரம்பித்த பாபத்தைத் தவிர்த்து மற்ற பாபங்கள் எல்லாம் நசித்துவிடும். அதாவது— அநாதி ஜந்மபரம்பரையாலே ஸம்பாதிதமாய் பலப்ரதாநம் பண்ண அவகாசமற்று ஸஞ்சிதமான பாபமும், சரணாகதி பண்ணிக்கொண்ட பிறகு தெரியாமல் செய்த பாபமும், ப்ராரப்தத்திலும் வேறு ஜந்மத்தில் அனுபவிக்கக்கூடிய பாபமும் நசித்துவிடும். ‘இந்த தேஹாவஸாநத்திலேயே மோக்ஷம் வேண்டும்’ என்று நாம் கேட்டதினால் அடுத்த ஜந்மம் நமக்குக் கிடையாது. ஆகையால் அடுத்த ஜந்மத்தில் அனுபவிக்கக்கூடிய ப்ராரப்த பாபமும் இதனால் போய்விடுகின்றது. இதை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் 'प्रारब्धेतरपूर्वपापमखिलं प्रामादिकं चोत्तरं … अनभ्युपगतप्रारब्धखण्डं च नः’ என்பதால் நன்றாக விளக்கிக் காட்டியிருக்கின்றார். ஆகையால் அப்யுபகதப்ராரப்தபாபம் தொலையாது. அதை அனுபவித்தே தீரவேண்டும். அதனால் சரணாகதர்களும் பலவித கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள்.

ஸுகுணன்:— நான் இன்னும் சரணாகதி பண்ணிக்கொள்ளவில்லை. எனக்கு சரணாகதி பண்ணிக்கொள்ளவேண்டும் என்கிற ஆஸ்தை அதிகமாக இருக்கின்றது. ஆனால் நமதாசார்யர்களிடம் போனால் க்ராப்பை எடுத்துக்கொண்டு வா. பிறகு பண்ணுகின்றேன் என்றல்லவோ சொல்லுவார்கள்.

ஸுமித்ரன்:— நீ இன்னும் சரணாகதி பண்ணிக்கொள்ளவில்லையா? அதில் ஆஸ்தையும் த்வரையும் இருப்பதைப்பற்றி மிக்க ஸந்தோஷம். ப்ரபத்தி வித்யைக்கு ஐந்து அங்கங்கள் முக்யமாக வேண்டும். அவைகளாவன—

‘இனி நான் உமக்கு (பகவான்) அநுகூலனாக இருக்கின்றேன்’ ‘இனி உம்முடைய திருவுள்ளத்திற்கு உகப்பில்லாத கார்யங்களிலிருந்து விரமிக்கின்றேன்’ என்கிற ஆநுகூல்ய ஸங்கல்பமும், ப்ராதிகூல்யவர்ஜனமும், ஆகிஞ்சந்யாநுஸந்தானமும், மஹாவிச்வாஸமும், நீயே ரக்ஷிக்கவேண்டும் என்கிற கோப்த்ருத்வவரணமும் அங்கங்கள். இதில் இரண்டாவது அங்கமான

'இனி உன் திருவுள்ளத்திற்கு உகப்பில்லாத கார்யங்களைச் செய்கிறதில்லை' என்பதை நிறைவேற்ற வேண்டாமா? அதைத்தான் ஆசார்யர்கள் முதலில் சொல்லுகின்றார்கள்.

ஸுகுணன்:—'க்ராப் வைத்துக்கொள்ளக் கூடாது' என்று சாஸ்த்ரம் கூறுகின்றனவா? அக்காலத்திலும் க்ராப் உண்டா? இப்பொழுது ஸமீபகாலத்தில்தானே இவ்விதம் கெட்டுவிட்டதாக தூஷிக்கின்றார்கள். 'அந்நிய தேசத்தவர்களுடைய பாஷை நம் தேசத்தில் வேரூன்றியமாதிரி நாகரீகமும் (ஆசாரமும்) வேரூன்றிவிட்டதே' என்றல்லவோ வருந்துகின்றார்கள். ஆக,க்ராப் ஸமீபகாலத்தில்ஏற்பட்டதுதானே. இதை சாஸ்த்ரம் எப்படி நிஷேதிக்கும்? 'வெங்காயம் சாப்பிடக்கூடாது' என்பதைப்போல் கூறினால் அல்லவோ அதை அனுஷ்டிப்பதினால் பகவானுடைய கட்டளையை மீறியதாகும்

ஸுமித்ரன்:— ஆம்! வாஸ்தவம். சாஸ்த்ரம் 'க்ராப் வைத்துக்கொள்ளக்கூடாது' என்று நிஷேதிக்கவில்லை. ஆனால் சாஸ்த்ரம் சொல்லுகின்றபடி நடக்கவேண்டும் என்றுதான் சொல்லுகின்றார்கள். அது என்ன சொல்லுகின்றது தெரியுமா? ஒருவனுக்கு 40- ஸம்ஸ்காரங்கள் பண்ணவேண்டும் என்று விதிக்கின்றது. அதில் 'சௌளம்' என்பது ஒரு ஸம்ஸ்காரம். அதை மூன்று அல்லது ஐந்தாவது வயதில் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று விதிக்கின்றது. சௌளம் பண்ணிக்கொள்வதற்கு முன் குழந்தைகளுக்கு வகுடு எடுத்துத் தலையை வாருகின்றார்கள். குடுமி வைத்த பின் முன்பக்கம் வகுடு எடுப்பதற்கு வேண்டிய ஸௌகர்யமில்லை. குடுமி வைத்துக் கொண்டிருப்பவர்கள் சாஸ்த்ரம் கூறியபடி ஸ்நாநம் செய்ததும் குடுமியை அவிழ்த்து அந்த ஜலத்தைக் கீழே பிழிவார்கள். அந்த ஜலத்தை தேவதைகள் குடிப்பதாக சாஸ்த்ரம் கூறுகின்றது. அதாவது:—

'देवाः पिबन्ति केशाम्बु शरीरांबु तथर्षयः।
पिबन्ति तद्वत्पितरः वस्त्रनिष्पीडनोदकं॥

என்று. மேலும் சரீரஜலத்தை ருஷிகளும் வாஸோதகத்தை பித்ருக்களும் அருந்துகின்றார்கள்என்றுசாஸ்த்ரத்திில்சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் தலையை முடிந்துகொள்ளாமல் எந்த கார்யம் செய்தாலும் அது நிஷ்பலமாகிவிடும். ஒருவனுடைய தாய் தமப்பன் இறந்துவிட்டால் தலைமயிரை இரண்டாக அவிழ்த்துப்போட்டுக்கொண்டு துடையையும் தட்டிக்கொண்டு ஸ்மசானத்தில் சவத்தை சுற்றிவரவேண்டும் என்று கூறுகின்றது. ஆக இதில் கூறியதை ஒன்றையாவது க்ராப் வைத்துக்கொண்டவர்கள் அனுஷ்டிக்கமுடியுமா? நேர் மாறாகத்தான் க்ராப் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அனுஷ்டிக்கவேண்டியிருக்கும். அதாவது முன்பக்கத்தில் வகுடு எடுத்துக் கொள்கின்றான். குடுமி இல்லாததால் ஸ்நாநம் பண்ணியானதும் ஜலத்தைப் பிழிவதற்கு குடுமி கிடையாது. முடிந்து கொள்வதற்கு நீளம் கிடையாது. அவிழ்த்துவிடுவதற்கும் குடுமி கிடையாது. இவ்விதம் முடிந்ததாக ஆகாமலும் அவிழ்த்ததாக ஆகாமலும் இருக்கின்றது. (முன் கூறிய காரணத்தினாலேயே நமது பெரியோர்கள் நமது நாகரீகக் குழந்தைகளுக்கு இரட்டைப் பின்னல் பின்னுவதை வெறுக்கின்றார்கள். ஏன்? இதைப் பெரிய அநிஷ்டமாக எண்ணுகிறார்கள். இவ்விஷயம் தெரிந்தபிறகு எல்லோருக்கும் அநிஷ்டமாகத் தான் தோன்றும். அநிஷ்டத்தைச் சொல்லாமல் பெரியோர்கள் இரட்டைப் பின்னல் வேண்டாம் என்கிறார்கள்.) ஆகையால் குடுமி முக்யமாக வேண்டியிருக்கின்றது. அதைக் கத்தரித்துக்கொண்டால் அது சாஸ்த்ர விருத்தமாகாதா? குடுமி வைத்துக்கொள் என்று சொன்னதினாலேயே அதை வெட்டிக்கொள்ளக் கூடாது. அதாவது—க்ராப் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சாஸ்த்ரம் கூறியதாகாதா? சாஸ்த்ரம் எவ்விதம் நிஷேதிக்கிறது என்பதை அறிந்தாயா?

ஸுகுணன்:— நீ சொல்லியது என் மனத்தில் நன்றாகப் பட்டது. எல்லாம் உண்மையே ஆகிலும் இதில் ஒரு ஸந்தேஹம் உண்டாகின்றது. அதைக் கேட்கிறேன். கோபித்துக் கொள்ளாதே. தவறாகவும் எண்ணக்கூடாது. வழுக்கைத் தலையானவர்களும், மயிர் உதிர்ந்தவர்களுமான எத்தனையோ பெரியோர்கள்

இருக்கின்றார்கள். வயதாகிவிட்டாலே இவ்விதம் நேருகின்றது. அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் சாஸ்த்திரத்திற்கு மாறுபட்டு நடப்பவர்களா? அவர்களைப்போல் நாங்கள் என்று ஏன் எண்ணிக்கொள்ளகூடாது?

ஸுமித்ரன்:— ஸுகுணா! ஏன் உன் புத்தி கோணவழியில் போகின்றது. வழுக்குத்தலை பகவத்ஸங்கல்பத்தால் நேருகிறது. மயிர் உதிர்ந்தவர்கள் சிறியதோர் மயிரை முடித்து வைத்துக்கொண்டிருப்பதை நீ பார்த்ததில்லையா? வழுக்குத் தலையர்களைப்போல் நாங்களும் என்கிறாயே இது ந்யாய்யமாகுமா? சாப்பாட்டிற்குப் பூர்ணமாக இருக்கும்போது பரதேசிகளைப்போல் சில தினங்கள் சாப்பிடாமலிருப்பாயா? பிச்சை எடுக்கத்தான் போவாயா? அதெல்லாம் பகவான்செயல். அவனைப்போல் நான் இருக்கமுடியுமா? சாப்பாட்டிற்கு இருக்கும்போது நான் ஏன் பட்டினி கிடக்க வேண்டும்? என்றல்லவோ கேட்பாய். அதே போல்தான் தலைமயிர் பூர்ணமாக இருக்கும்போது அதை ஏன் கத்தரித்துக்கொள்ளவேண்டும்? இனி லோகரீதியாகவும் சொல்லுகிறேன் கேள். வைதிகத்திலோ, லௌகிகத்திலோ ஒருவிதமான கட்டுப்பாடு அவச்யம்வேண்டும். காங்க்ரஸ்காரர்கள் ஏன் கதர் துணியும், கதர் குல்லாயும் அணியவேண்டும்? வக்கீல்கள் ஏன் கருப்புக் கோட் போட்டுக்கொள்ள வேண்டும்? போலீஸ்காரர்கள் ஏன் ஒரேவிதமான குல்லாயும் உடுப்பும் தரிக்கவேண்டும்? அவரவர்களுக்குள்ள சின்னங்கள் இல்லாவிட்டால் கௌரவிக்கின்றார்களா? அக்கார்யங்களைச் செய்யத்தான் அனுமதிக்கின்றார்களா? இல்லை. ஏன்? சட்டம் விதிக்கின்றபடி அவர்கள் நடந்துகொள்ளாததால் மேலதிகாரிகள் சட்டப்படி நடக்கும்படி சொல்லுகிறார்கள். அதன்படி நடந்தால்தான் உள்ளே விடுகிறார்கள். மேற்கொண்டு கார்யங்களைச் செய்ய அனுமதிக்கின்றார்கள். அவ்விதமே நமக்குப் பூஜ்யர்களான ஆசார்யர்கள் சட்டத்தின் ஸ்தானத்தில் சாஸ்த்ரத்தைச் சொல்லுகின்றார்கள். சட்டம் என்பது மிதபுத்திகளான நம்போன்றவர்களால் ஏற்படுத்தப்பட்டது. சாஸ்த்ரம் அப்படியன்று. ஆயிரம் தாய் தமப்பன்மார்களைவிட அதிக வாத்ஸல்யமுடையது. முக்காலமறிந்த முனிவர்களால் ச்ருதியை மூலமாகக்கொண்டு செய்யப்பட்டது. அதை அவமதிப்பது உசிதமா? சாஸ்த்ரப்படி நடக்க வேண்டும் என்று பெரியோர்கள் சொன்னால் ‘அவருக்குக் கொஞ்சமேனும் லௌகிகம் தெரியவில்லை, இவ்வளவு பெரிய மனிதர் (லௌகிகத்தில் வந்தால் இப்படியா சொல்லுகிறது’ என்று நாம் பெரியோர்களை தூஷிப்பது ந்யாய்யமா? எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் ந்யாயஸ்தலங்களில் சட்டப்படியன்றோ நடத்துகின்றார்கள், அது புகழ்வதற்குக் காரணமாகின்றது. இது இகழ்வதற்குக் காரணமாகின்றது. அந்தோ! என்ன காலத்தின் விபரீதம். இவைகளை நான் உலகத்தோருக்கா உபதேசிக்கப் போகின்றேன்? சொன்னால் தான்கேட்பாருண்டா? கேட்டாலும் அனுஷ்டிப்பவர் ஒருவர் உண்டா? நீ ஏதோ கேட்கவே இவைகளைச் சொன்னேன். நான் சொன்னவைகளைத் தனிமையில் நன்கு யோசித்துப் பார். நாழிகையாகின்றது. இனி அவகாசமில்லை. ஸந்தோஷம் போய்வா. அடுத்த ஸந்திப்பின்போது உன்னுடைய வேஷம் மாறி உண்மையாகக் காட்சியளிப்பாய் என்று எண்ணுகிறேன். போய்வா.

ஓர் திருத்தம்:—

சென்ற ஸஞ்சிகையில் 211ம் பக்கத்தில் 40ம் வரியில் ‘சார்ங்கம்’ என்பதை ‘பாஞ்சஜந்யம்’ என்பதாகத் திருத்திக்கொள்ளவும்.

ஸ்ரீ:

கண்ணனாக வந்த வேங்கடவன்

பகவானுடைய குணங்களில் மிகவும் உயர்ந்ததாகக் கூறப்படுவது ஸௌலப்யமாகும். அயர்வறுமமரர்கள் அதிபதியாய் நித்யவிபூதியில் எழுந்தருளியிருக்கும் அவாப்த ஸமஸ்த காமனான அவன் இப் ப்ரக்ருதிமண்டலத்தில் மனிதசரீரத்தை எடுத்துக்கொண்டு ராமக்ருஷ்ணாதிரூபேண இருந்து பல லீலைகளைச் செய்து துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனங்களைச் செய்து வருவதாகப் புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது. அதிலும் காலாந்தரத்திலும் தேசாந்தரத்திலுமிருக்கும் பிற்பட்டவர்களான ஜனங்களின் ஹிதத்தைக் கருதி அவர்களை ரக்ஷிக்க ஸங்கல்பித்துக்கொண்டு அர்ச்சாவதாரத்துடன் கோயில், திருமலை முதலான திருப்பதிகளில் வாஸம் செய்துவருவதும் தன் வடிவழகிலும், குணங்களிலும் ஆழங்கால்பட்டவர்களுக்கு நற்கதியை அளித்து வருவதும் அவனது ஸௌலப்யத்தினாலேயே. 'உயர்ந்தவன் தாழ்ந்தவர்களுடன் கலந்து பரிமாறுதல்' என்று ஸௌலப்யம் என்பதற்குப் பொருள் கூறியுள்ளனர் பெரியோர். ராமாவதாரத்தில் சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்து, குஹ, சுக்ரீவ, ஹநுமத், சபரீ, விபீஷணாதிகளான பலதாழ்ந்தவர்களுடன் கலந்துபரிமாறி தனது குணத்தை வெளிப்படுத்தியுள்ளான். கண்ணனாய் வந்த காலத்து, நந்தகோபகுமாரனாய் வளர்ந்தபோதும், இடக்கை வலக்கையறியாத இடைப் பெண்ணுடன் பழகியும், திருட்டுப் பட்டம் வாங்கியும் மத்தாலடிபட்டும், தூத்யத்தைப் பண்ணியும், ஸாரத்யம் பண்ணியும் இக்குணத்தைக் காட்டியுள்ளான். இக்குணத்திலீடுபட்ட பெரியோர்கள் 'எத்திறம்' என்று மோஹித்து வழிபட்டிருக்கின்றனர். அர்ச்சையிலும் இக்குணத்தைப் பிரகாசப் படுத்தியிருக்கிறான் ஸ்ரீமந்நாராயணன்.

108- திருப்பதிகளில் ஒன்றான திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீ பார்த்தஸாரதி. இங்கு இவருக்கு வழங்கப்படும் திருநாமம் **'வேங்கடகிருஷ்ணன்'** என்பதாகும். அர்ச்சையில் உள்ள வேங்கடவனுக்கும் விபவத்தில் இருந்த கண்ணனுக்கும் என்ன ஸம்பந்தம்? இரண்டு திருநாமங்களையும் ஒருங்கு சேர்த்து இவ்வெம்பெருமானுக்குத் திருநாமமாகக் கூறிவருவதன் பொருளென்ன? என்ற ஐயம் உண்டாயிற்று. பிறகு பெரியோர்கள் மூலம் கிடைத்த உண்மையால் அர்ச்சா தசையிலும் தனது ஸௌலப்யத்தைக் காட்ட திருவேங்கடவனே திருவல்லிக்கேணியில் பார்த்தஸாரதியான் என்று ஸமாதானம் கிடைத்தது. அதன் விபரம் வருமாறு:—

தொண்டைமான் என்னும் ராஜா சிறந்த பக்திமான். அவன் பலவிடங்களில் பெருமாளை ஸேவித்துக்கொண்டும், ஆங்காங்கு கைங்கர்யங்களைச் செய்துகொண்டும், பல பாகவதோத்தமர்களிடம் பகவத்விஷயச்ரவணம் செய்துகொண்டும் வருமளவில், ஸ்ரீ க்ருஷ்ணாவதாரசரிதங்களைக் கேட்டுப் பரவசமானான். தூத்யஸாரத்யாதிகளைப் பண்ணிய அவனது குணத்திலீடுபட்டு அந்த ரூபத்துடன் அவனை ஸேவிக்கவேணுமென்று ஆசைப்பட்டான். உடனே தன் குலதெய்வமான கலியுகப்ரத்யக்ஷதைவதமான திருவேங்கடமுடையானை பார்த்தஸாரதியாக ஸேவை ஸாதிக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தானாம். கருணாநிதியான ஸ்ரீ திருவேங்கடநாதனும் திருவல்லிக்கேணியில் ஸ்ரீ பார்த்தஸாரதியாக தன் குடும்பத்தாருடன் (பலராமன், ருக்மிணி, ஸாத்யகியாழ்வார் – அநிருத்தாழ்வான் இவர்களுடன்) ஸேவை ஸாதித்தானாம். அதனால் 'வேங்கடகிருஷ்ணன்' என்ற பெயர் இவ்வெம்பெருமானுக்கு ஏற்பட்டதாம். பார்த்தஸாரதியை குழலூதிவரும் கண்ணனாக ஸ்ரீஜயந்தியானவுடன் வாசகர்கள் கண்டுகளிக்க இம்மாத அட்டையில் வெளியிட்டிருக்கிறோம்.

ஸ்ரீ:

ஹம்ஸஸந்தேசம்

तस्मिन् सीतागतिमनुगते तद्दुकूलाङ्कमूर्तौ
तन्मंजीरप्रतिमनिनदे न्यस्तनिष्पन्ददृष्टिः ।
वीरश्चेतो विलयमगमत् तन्मयात्मा मुहूर्तं
शंके तीव्रं भवति समये शासनं मीनकेतोः ॥

(பதவுரை) ஸீதாகதிமநுகதே—ஸீதைநடை (யழகை) ப்போன்ற நடையுடையதும், தத்துகூலாங்கமூர்த்தௌ— அவளுடைய வெண் பட்டாடையிலுள்ள (ஹம்ஸ)வடிவைப்போன்ற வடிவையுடையதும், தந்மஞ்ஜீரப்ரதிமநிநதே— அவள் சிலம்பின் த்வநிக்கு எதிரொலிபோன்ற த்வநியையுடையதுமான தஸ்மிந்— (இப்படி ஸீதாஸாத்ருச்யங்களையுடைய) —அந்த ஹம்ஸத்தின் மீது, ந்யஸ்தநிஷ்பந்தத்ருஷ்டி:—வைக்கப்பட்டு நிச்சலமாயிருந்த த்ருஷ்டியையுடைய வீர:— ஸ்வபாவத்தில் அதிதீரராகிய ராகவ மஹாவீரர், முஹூர்த்தம்— கொஞ்சகாலம், தந்மயாத்மா— மனது ஸீதாமயமாகி, சேதோ விலயம்— மனோவ்ருத்திகளின் அத்யானம் ஓய்வை (நினைவற்ற மூர்ச்சை போன்ற அவஸ்தையை) அகமத்— அடைந்தார். ஸமயே— ஒரோர் ஸமயத்தில், மீனகேதோ:— மீனக்கொடியோனான மந்மதனுடைய, சாஸனம்— அதிகாரக்கட்டளை, தீவ்ரம்— அத்யுக்ரமாய், மீறமுடியாமல், பவதி— நேறுகிறது என்று சங்கே— நினைக்கிறேன்— சங்கிக்கிறேன்.

[விசேஷ உரை] வானரஸேனைகளைக் கிளப்பிக்கொண்டு இலங்கைக்குப்போய் ப்ரபல சத்ருக்களுடன் வீரப்போர் புரிய ஆலோசனை செய்துகொண்டு அன்று ராத்திரி கொஞ்சம் போது போக்கினார். ப்ரியை தூரத்திலிருப்பதால் மனம் விரஹநோய் கொண்டது. அரதியினால் வெளியே உலாவுகையில் பூர்ணசந்த்ர ஸத்ருசமான ராஜஹம்ஸத்தின் மநோஹர வெண் காந்தி முதலிய சோபைகளை அநுபவித்தாரென்று முன்ச்லோகத்தில் ஸாதிக்கப்பட்டது. ‘ததர்ச’ ‘பார்த்தார்’ என்று முடியும் பதம் பூர்ணசந்த்ரனைப் பழிக்கும் ஸீதாமுகஸாத்ருச்யத்தை ஒத்துப் பார்த்தார். ஹம்ஸியோடு இன்பமாய்விஹரிப்பதற்காகக் காமராகத்தோடு வனிதஸௌந்தரவிலாஸங்களோடு மிகவழகிய நடைபோட்டுக்கொண்டு ஹ்ருதயத்தை ஹரிக்கும் த்வநிகளோடும், ப்ரியையிடம் சென்றுகொண்டிருந்ததில்ஸீதைக்கும்ஹம்ஸத்திற்குமுள்ள ஒற்றுமைகளை ஒற்று ஒற்றுக் கண்ணைக்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கையில் தூரத்திலுள்ள ஸீதையினிடமே மனம் லயித்து தன் நினைவில்லாத ப்ரஜ்ஞாபங்கமான அவஸ்தை நேர்ந்தது. ‘சேதோ விலயம்’ மனோவ்ருத்திகள் அடியோடு நின்று போன அவஸ்தையை’ என்று இங்கேயும் அடுத்த ச்லோகத்தில் ‘லப்தாச்வாஸ: கதமபி’ எப்படியோ மூர்ச்சை தெளிந்து தன் வசத்திற்கு வந்து என்று தொடக்கத்திலும் கூறுகிறார். என்ன தீரஸ்வபாமாயிருந்தாலும் ஒரோர் ஸமயங்களில் காமனுடைய சாஸனம் அதிதீக்ஷ்ணமாய் மஹாவீரரான அவதாரபுருஷனையும் தைர்யமழியச் செய்கிறதென்று உத்ப்ரேக்ஷிக்கிறார். உலகத்திலுள்ள ஸாமாந்ய நடப்பினால் ப்ராக்ருதமான இந்த மஹாபுருஷவிசேஷத்திலும் இது நிரபவாதமாய் நடக்கிறது போலும் என்கிறார்.

தஸ்மிந்– (1) பூர்ணிமாசந்த்ரனுடைய காந்தியோடு ப்ரகாசிப்பதும், காமராகத்துடன் மிகவழகிய விலாஸநடைகளோடும், ஹ்ருதயத்தை ஹரிக்கும் ரக்தகண்ட த்வநிகளோடும் நடந்த ஹம்ஸத்தின் மீது. (2)என்றைக்கும் முக்காலத்திலுமுள்ள எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பவருக்கும் இப்பொழுது இந்த ஹம்ஸம் அபூர்வம்போல ஆச்சர்யமாகத்தோன்றியது. ஸீதாஸாத்ருச்யங்கள் பலவிருப்பதால் அவளை 'ஸா' என்று குறிப்பதுபோல் இந்த ஹம்ஸத்தை 'ஸ:' என்று குறிக்கவேண்டுமாயிருந்தது. இந்த ஸாத்ருச்யங்கள் ஆண் ஹம்ஸத்திற்கும் ஸீதைக்கும் ஸாதாரணம். ஸீதாகதிமநுகதே– (1) ஸீதையின் நடையழகையே அதே ஹம்ஸம் பின் தொடர்கிறது போலிருக்கிறது. அவள் நடை ஹம்ஸத்திற்கும் நடை கற்றுக்கொடுப்பது. ஹம்ஸம் நடைக்கும் அவள் நடை உபமானம். (2) ஸீதை இப்படி விலாஸ நடையோடு என் ஸமீபம் வாராளோ– 'கதா நு கலு மாம் ஸாத்வீ ஸீதா ஸுரஸுதோபமா । யோத்கண்டா கண்டமாலிங்க்ய மோக்ஷ்யத்யாநந்தஜம் பய: ।' முதலிய ராமாயண ச்லோகங்களிலுள்ள மனோரத ஆசைகள் மனதைக் கலக்குகின்றன. 'கூடா நூபுரசப்தமாத்ரமபி மே காந்தாச்ருதௌ பாதயேத் । பஶ்சாதேத்ய சனை: கராம்புஜவ்ருதே குர்வீத வா லோசநே ॥' என்ற விக்ரமோர்வசீயச்லோகமனோரதங்களை நினைக்கவேணும். 3ஹம்ஸர்களான ஆசார்யர்கள் 'தேசிகாஸ்தத்ர தூதா:' என்று 'அஞ்சிறையமட நாரைத்' திருவாய்மொழியின் ஸங்க்ரஹச்லோகாநுபவமும் இங்கே கவி நெஞ்சிலுளது. 'விதியினற்பெடை மணக்கும் மென்நடையவந்நங்காள்' என்பதின் நினைவு இருந்தது. 'க்ரீடாகேலய்' 'ஸீதாகதிமநுகதே' என்பதாலும் த்வநிக்கப்படுகிறது. ஸீதை உலகத்திற்கு ஆத்மவிவேகத்தைக் கொடுத்துத் திருத்தி புருஷகாரம் செய்யும் ஆசார்யை. அவள் கதியை அநுஸரிப்பவர்கள் ஹம்ஸரான ஆசார்யர்கள். இந்த ஸந்தேசத்தில் யதிராஜஹம்ஸருடைய நினைவுள்ளது. அடுத்த ச்லோகத்தில் 'லக்ஷ்மணஸ்யாக்ரஜந்மா' என்றும் முடிப்பதற்குமுன்னேடு'கர்ணேகிதம்தவ ரசயிதாலக்ஷ்மணஶ்சாபகோஷை:' – ப்ரணவதநுர்கோஷத்தாலும் ஔபநிஷத மஹாஸ்த்ரசப்தங்களோடும்,உன்காதில் வாச்ஸுதைகளை அம்ருதவர்ஷமாய் லக்ஷ்மணன் வர்ஷிப்பான்என்றுகூறுவதாலும் 'ஹநுமத்ஸமேந குருணா' என்று ஸாதித்திருப்பதற்கேற்ப, முதல் ச்லோகத்தில் வாயுபுத்ரரைக் குறித்துவிட்டு உடனே லக்ஷ்மணராஜஹம்ஸரைக் கீர்த்தனம் செய்வதாலும் த்ருடீக்ருதமாகிறது. (4) இந்த ஹம்ஸகவிஞர் ஆசார்யஹம்ஸர். ஹம்ஸகாவ்யமும் பகவத்பக்தி முதலிய அத்யாத்மரஸங்களை உட்கொண்ட ஆசார்யகம் செய்யும் காவ்யமுமாகும், ஹம்ஸகவியின் ஹம்ஸகாவ்யம் 'மந்தமந்தமாய்' லளிதவிலாஸங்களோடு ஸீதாகதியைப் போலவும் ஏகாந்தமாய் ஸீதாசரித்ரமான ஸுந்தரகாண்டத்தின் ஸுந்தரகதிகளையும் பின் தொடருகிறது என்றும் த்வநி. 'ஸீதாகதி' என்பதும் 'ஸீதையின் அயநமான' ராமாயணத்தையும் ஸூசிக்கும். இந்த காவ்யம் ஸுந்தரகாண்டமயமே. (5) இந்த ஸாத்ருச்யங்களால் 'அவளுடைய, 'அவளுடைய' என்று ஸீதை நினைவுப் பெருக்கால் மறக்காத ஸீதாமயமாக்கி அவளிடம் விலீநமாகும்படிச் செய்யப்படுகிறது.

'தத்துகூலாங்கமூர்த்தௌ' (1) விரஹ காலத்தில் 'ஹம்ஸாங்கிதேந க்ஷௌமேண' என்றபடி தரித்த ஹம்ஸஉருவத்தோடு கூடிய தலைப்பின் ஸ்மரணம் வருகிறது. அரண்யவாஸத்திலும் மாமனார்மெல்லியதானபட்டுப் புடவைகளைத் தந்திருந்தார். (2) ஹம்ஸ! ப்ரயச்ச மே காந்தம்' என்கிற விக்ரமச்லோகத்தையும் நினைக்கவேணும். (3) மூர்த்தி என்பதால் ஹம்ஸத்தினிடம் கௌரவத்தையும் காட்டுகிறது. (4) சுத்த வெண்மையான ஸத்வோத்தரகுணங்களுக்கேற்ற திருமேனி ஆதிஹம்ஸாவதாரத் திருமேனியும், சுத்தச்வேதமான ஹயக்ரீவத் திருமேனியும் இங்கே கவி நெஞ்சிலுள. ஆதிஹம்ஸரான ஆசார்யரை உடனே மேலே குறிக்கப்போகிறார். தந்மஞ்சிரப்ரதிமநிநதே– 'ஹம்ஸத்வநி' என்பது ப்ரஸித்தம். அவள் நடக்கையில் நடை ஹம்ஸ

நடைக்கும் உபமானமாவதுபோல அவள் சிலம்போசையும் ஹம்ஸத்தின் த்வநிக்கு உபமானமாகிறது. அவள் த்வநி கோகிலத்வநி. ‘ப்ரஜல்பிதாயாமபிஜாதவாசி’ ‘அப்யங்யபுஷ்டாப்ரதிகூலசப்தா’ என்ற குமாரஸம்பவ ச்லோகத்தை நினைக்கவேணும். ‘ந்யஸ்தநிஷ்பந்தத்ருஷ்டி:’ -ஹம்ஸத்தில் வைத்த கண் அசங்கவேயில்லை. கண்ணைக்கொட்டாமல் பார்ப்பது ஹம்ஸத்தை. அப்பார்வையால் ஸீதையின் நினைவே பெருகுகிறது. மெள்ள மெள்ள மனம் லயித்து, இல்லாததுபோல் ‘அமங்பாவத்தை’ அடைவதாக ‘சேதோவிலயத்தை’ அடைந்ததாக அடுத்த அடியில் குறிக்கிறார். ‘மனம்’ நிர்வ்யாபாரமாய் ஓய்ந்துபோகவே கண்ணும் ஓய்ந்துபோய் நிச்சலமாகிறது. அங்யத்ர மனு அபூவம் நாத்ராக்ஷம்’ ‘மனம் வேறிடம் சென்றுவிட்டதால், கண்களிருந்திருந்தும் பார்ப்பதில்லை’ என்ற உபநிஷத்தை நினைக்கவேணும். ‘வீர:’ தோராத தனி வீரனாயினும் ‘சேதோவிலயம் அகமத்’ மனோவ்ருத்திகள் ஒடுங்கி ப்ராஜ்ஞாபங்கம் போன்ற அவஸ்தை. யோகத்தின் அப்யாஸத்தால் மனதின் லயம் வரும். இங்கே ராகபாரவச்யத்தால் விரஹசோகத்தால் தானாக வரும் லயமூர்ச்சை யோகரூபயத்நங்களால் மனோலயத்தைப் பெறுவதில்லை. மங்மதபாரவசமாய் விரஹம் ஸஹிக்காமல் ஸீதாத்யாநத்தால் மனோலயத்தை அடைவதே என்பதை ‘அகமத்’ என்று ஸூசிப்பது. ‘தங்மயாத்மா’ இவர் கண் எதிரிலுள்ள ஹம்ஸத்தை நோக்கியிருந்தாலும் மனம் ஸீதாமயமாகவே ஆய்விட்டது. உள்ளமெல்லாம் ராமமயமாகும். ராமன் ஸிதாமயராகிறார். இங்கே யோகசாஸ்த்ரபதங்களின் மிகுதியைக் காண்கிறோம். மனது லயித்து ஒருங்கே மனதில் பலாத்காரமாய் வந்து உதித்த மநஸிஜன் ஜயமடைகிறான். ‘முஹூர்த்தம்’ மஹாதீரனானதால் ஸ்வல்பக்ஷணங்களில் ஸ்வபாவத்தைத் திருப்பியடைகிறார். ‘சங்கே’ ‘மங்யே.’ ‘சங்கே’ ‘ஊஹம்’ முதலிய உத்ப்ரேக்ஷாவாசகபதங்களில் ‘சங்கே’ என்று ‘இப்படி இருக்குமோ’ என்று ஸந்தேஹத்தையும் ஸூசிக்கும் சங்கே என்பதை ப்ரயோகிக்கிறார். ‘தீவ்ரம் பலதி ஸமயே’ ‘ஸமய உபகரோதி பலாபலம்’ என்ற மாக ச்லோகத்தின் நினைவு. ‘சாஸநம்’ ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸனே கார்க்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:’ ‘வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந:’ ‘ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம்’ என்றபடி எல்லோரையும் சாஸநம் செய்பவர், மங்மத சாஸநத்திற்கு வசமாகிறார். ‘மீனகேது’ கருடத்வஜரை மீன்கொடியோன் ஜயத்து மூர்ச்சிக்கச் செய்யும் ஸமயம் என்று ரஸம்.

210732

ஓர் அறிவிப்பு

ஸ்ரீமான். உப. K. ராஜம் ஐயங்கார் ஸ்வாமி சென்ற வருஷம் சேலத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா விற்கு கௌரவ ஏஜண்டாக நியமிக்கப்பட்டார். வழக்கம்போல் அந்த ஸ்வாமியினிடம் சேலம் சந்தாதார்கள் தங்கள் சந்தாபாக்கியை செலுத்தும் படி ப்ரார்த்திக்கப் படுகின்றார் கள். பாக்கி ஜாப்தா அவரிடம் அனுப்பப் பட்டிருக்கிறது.

ஏஜண்டின் விலாஸம்
ஸ்ரீ. K. ராஜம் ஐயங்கார்
156—2-வது அக்ரஹாரம் சேலம் டவுன்.

மானேஜர்
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ:

திருவஷ்டாக்ஷரத்தைப் புகழும் திருமங்கையர்கோன்

எம்பெருமானிடம் எட்டெழுத்தோதிய இருந்தமிழ்நூற்புலவனாகிய கலியன் திருவேங்கடத்தெழுந்தருளும்போது, விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பாகிய அத் திருமலையில் வைகுந்தம் புக்கவரும் மீண்டு தொழக் காதலிக்கும் அந்த அலர்மேல்மங்கைமணாளனை மெய், நா, மனத்தால் வழிபாடு செய்யக்கருதி ‘ஏ மனமே! வேறு சிந்தையின்றி இவ்வெம்பெருமானையே சிந்திப்பாய். அவனைச் சிந்தித்தாலே தேன் ஊறுமே. அந்தப் பைந்துழாய்முடியானைச் சிந்திக்க ஓர் நல்ல ஸந்தர்ப்பம் ஏற்படுதல் நமது முன்னோர்செய்ததவமே’ என்று தம் மனதைக் குறித்துக் கூறுகிறார். மனத்தோடு மாத்திரமேயன்றித் தம் மனத்தோடு பொருந்தியவர்களும் தம்முடன் திவ்ய தேசயாத்திரையாக வரும் பாகவதோத்தமர்களைக் குறித்தும் கூறுகிறாராகவுமாம். அப்படிக் கூறினால் அந்த மனமும், அப் பாகவதர்களும் உடனே ஆழ்வார் சொல்லியதைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும். அப்படி யாரம்பித்தாலும் அந்த சிந்தை நிலையாக பகவத்யானத்திலே நின்று அநுபவிக்க வேண்டுமே? திடீரென்று அப்படி வசப்பட்டு வருமா? ஓடிக்கொண்டேயிருப்பதல்லவோ சிந்தையின் இயல்பு? அதனால் மனத்தை வசப்படுத்துவதும் பரமனையும் பக்தர்வசமாக்குவதுமான திருவஷ்டாக்ஷரமாகிய மஹாமந்திரத்தை அநுஸந்திக்கும்படி வற்புறுத்துகிறார். அப்படி வற்புறுத்தும்போதே அத் திருநாமமந்திரத்தினால் தானடைந்த பெருமைகளை நினைத்து க்ருதஜ்ஞதாநுஸந்தானத்துடன் அதனுடைய பெருமைகளை எல்லோரும் அறிந்து அதனிடம் அசஞ்சலமான பக்தியைக் கொள்ளவேண்டுமென்னும் நோக்கத்துடன் விளக்கியருள்கிறார். ‘வேதங்களில் சொல்லப்பட்டதும், மிக மிகப் பெருமை பொருந்தியதென்று உத்கோஷிக்கப்பட்டதும், மிக இனிமையுடையதும், பரமபுருஷனாலேயே உகந்து உபதேசிக்கப்பட்டதும், அபரிமிதமான ஸம்பத்தையும் ச்ரேயஸ்ஸையும் தருவதும், திருமங்கையால் உகக்கப்பட்டதும், திருவின் ஸம்பந்தமுடையதும், அழகியதுமான பகவானுடைய திருநாமமாகிய திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்வீர். அதை ஒரு தரம் அநுஸந்தித்து நிறுத்திய பின்பும் பரமபுருஷனுடைய பெருமையை விஸ்தாரமாக நமக்கு அது அறிவிக்கும். அப்படிப்பட்ட ரமணீயமான திருவஷ்டாக்ஷரத்தை ஒரு தரம், இரு தரம் அல்லது சில தரம் சொல்லி நிறுத்தாமல் பின்னும் பின்னும் சொல்லிக்கொண்டே யிருங்கள். ஆனால் நீங்கள் சில தடவைகள் அநுஸந்தித்து நிறுத்திவிட்டால் அதனால் பரமன் உங்களைக் கைவிட்டு விடமாட்டான். ஸர்வவிதத்திலும் பூர்ணனான வெம்பெருமான் திருவஷ்டாக்ஷரத்தை யநுஸந்திக்கும் அனைவரையும் வாசியற உய்யும்படிக்குக் கிருபை பண்ணித் தாமே விரும்பி அவர்களை எடுத்தணைத்து இப் பிறவிநோயே யில்லாமல் செய்வான். ஆகையால் பரமனுடைய க்ருபையை சங்கிக்க வேண்டாம். பின் தொடர்ந்து அநுஸந்திக்கவேண்டிய அவசியம் யாதென்னில்; நினைக்கும்போது இனிக்கும், சொல்லும்போது அமுதாகும் அந்தத்திவ்யத் திருநாமமாகிய மந்திரரத்தினத்தை யநுஸந்திப்பதே பெரும் பயனல்லவா? அதனாலே விடாது அநுஸந்தியுங்கள்’ என்கிறார் கலியன். அப்போது அவருடைய மனதும் மனமொத்த பாகவதரும் அத் திருநாமத்தின் அநுஸந்தானத்தின் பெருமையால் அடைந்துள்ள குதூஹலத்தை நோக்கி மகிழ்கிறார் கலியன்.

இப்படிப்பட்ட திருவஷ்டாக்ஷரத்திற்குக் கட்டுப்பட்டவனும, மஹாதயாநிதியும், தன்னோடொப்பாரும் மிக்காருமிலாதவனுமாகிய அலர்மேன்மங்கையுறைமார்பன் இங்கே இம்மலையிலேயே நமதருகிலேயே கோயில்கொண்டிருக்கிறான். நம் போன்ற சேதனர்களை யநுக்ரஹிப்பதற்கென்றே ஸ்ரீவைகுண்டம் க்ஷீராப்தி முதலியவிடங்களை விட்டு இங்கே எழுந்தருளி ஸ்திரப்ரதிஷ்டிதனாய் நின்று நமக்காக

நமது வரவுக்காகக் காத்திருக்கிறான். பெரிய பிராட்டியார் வீற்றிருக்கும் கமலமலரின் வாஸனை எப்படி இங்கெல்லாவிடத்திலும் வீசுகிறது பாருங்கள்! அன்றியும் அப்பிராட்டியமரத்தக்க அழகும் குணமும் பெருமையுமுள்ள தாமரைமலர்கள் இப் பிரதேசமெங்கும் எவ்வளவு ரமணீயமாக மலர்ந்து வாஸனை வீசுகிறது பாருங்கள்! அஃதன்றியும் பெரிய பிராட்டியார் பத்மாவதியாக அவதரித்துத் தம் தோழியரோடு இங்குள்ள பொழில்களில் விளையாடியபடியால் அவளுடைய திருவடி ஸ்பர்சத்தினால் மிக அழகுடனும், வாஸனையுடனும் விளங்கும் இவ் விடங்களெல்லாம் அவள் அமரத்தக்க கமலமலர்போலவே விளங்குவதைக் காணுங்கள்!. இப்படிப்பட்ட பெருமைகளால் உலகத்திற்கே- ஏழுலகங்களுக்குங் கூட ஓர் தேஜஸையளிக்கும் இம் மலையின் பெருமை ஒருவரால் அளவிட்டுக் கூற வியலுமோ? அழகியதும், திருமங்கை விரும்புவதுமான அழியாத ஐச்வர்யஸ்வரூபமே இம் மலை. அன்றியும் நமது பாபங்களை யெரிப்பதில் திருமங்கைக்கொப்பான கருணையையுடையது. ஆதலின் இம் மலையை யடைந்து இங்கே எழுந்தருளியிருக்கும் அழியாத செல்வமாகிய திருமங்கைமணாளனை யடைவாய் என் மனமே! என் அந்தரங்க பாகவதர்களே! வாருங்கள்' என்று கூவியழைக்கிறார்.

'பேசுமின் திருநாமமெட்டெழுத்தும்
 சொல்லி நின்றபின்னரும்
பேசுவார்தம்மை யுய்யவாங்கிப்
 பிறப்பறுக்கும் பிரானதிடம்
வாசமாமலர் நாறுவார் பொழில்சூழ்
 தருமுலகுக்கெல்லாம்
தேசமாய்த் திகழும்மலை
 திருவேங்கடமடை நெஞ்சமே'

என்னே அவருடைய ஜ்ஞானம்!
என்னே உதாரஸ்வபாவம்!!

குறிப்பு:- பேசுமின்- பேசுங்கள், பேசப்படுகிற, இனிய; திரு- அழகிய, திருமங்கையின் ஸம்பந்தம் பெற்ற, எட்டெழுத்து- திருவஷ்டாக்ஷரம், பேசும் இன் திருநாம மெட்டெழுத்தும் பேசுமின்; சொல்லி நின்ற பின்னரும் பேசுமின்; சொல்லி நின்றபின்னரும் பேசுவார் தம்மை யுய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரான்; வாசமாமலர்- வாஸனை வீசும் பெருமைபொருந்திய மலர்; (பெரிய மலர்) லக்ஷ்மி வாசஞ்செய்யும் பெருமை பொருந்திய மலர்; நாறு- மணக்கிற; போன்ற; வார்- நிறைந்த, தேசம்- தேஜஸ் வேங்கடம்- அழியாத ஐச்வர்யம்' பாபங்களை எரிப்பது; திருவேங்கடம்- அழகிய வேங்கடமலை; திருமங்கை வாழும் வேங்கடமலை; திருவைப் போல் நமது பாபங்களை எரித்து அழியாத ஐச்வர்யமாயிருக்கும் மலை; நெஞ்சம்- மனது; மனம் பொருந்திய பாகவதர்; பகவானே நமது பாபத்தை எரிப்பவனாகவும் நமது அழியாத ஐச்வர்யமாகவுமிருப்பதால் திருவேங்கடமென்றசொல்லே திருவேங்கடமுடையானைக்குறிப்பதுமாகும்.

(240-வது பக்கத் தொடர்ச்சி)

வீழ்கின்ற நுரையை உண்டு ஜீவிதம் செய்தவனை அதையும் செய்யக்கூடாதென்று நியமித்ததாலும் வேறொரு வழியுமின்றி எருக்கன் (செடியின்) பால், இலை, பூ, காய் இவைகளை தின்று அடியேன் கண்கள் பொட்டையாகி விட்டன என்று உரைத்துவிட்டு, 'அடியேனை க்ஷமித்துக் காப்பாற்றவேண்டு' மென்று மிகப் பணிவுடன் ப்ரார்த்தித்தான். ஆசாரியர் தெளம்யரும் அன்புடனிரங்கி அவனுக்குக் கண் உண்டாவதற்காக அச்வனி தேவதையின் மந்திரத்தை உபதேசித்தார். அதை சிஷ்யன் ஜபம் செய்து கண்களை அடைந்தான். பிறகு அச்வனி தேவதைகள், இவன் குருபக்திக்கு மெச்சி 'ஸவெ‌ஷ வ தெ வெஷாஃ ஹ்ருதி ஹாஸ்யஞ்தி, ஸகூஶாநி வ யஷூம்ஷாணி' என்று அநுக்ரஹித்தனர். இதனால், பண்டைக்கால குருகுலமுறையில் கல்வி (வித்யா) இக்காலத்தைப்போலல்லாமல் குருவின் முகமாகவே அதிகரிக்கப்படுவதால் ஸ்திரப்ரதிஷ்டிதமாயாகிறது.

(தொடரும்)

ஸ்ரீ:

பண்டைக் காலத்திய குருகுல முறை

கல்வியை கற்பதால் மனிதன் மனிதனாக ஆகிறான். கல்வி பயிலாதவனைப் பெரியோர்கள் மிருகமென்றே கூறுவர். இக்கல்வியை குருவின் பரிபூர்ணமான அனுக்ரஹத்தினால் தான் பெறமுடியும்.

நவீன காலத்தோர் இக்கல்வியைப் பள்ளியின்மூலமாகவே கற்கின்றனர். ஆனால் அநேக ஆண்டுகளுக்கு முன் நம் முன்னோர்கள் குருவின் வீட்டிற்குச் சென்று அவருக்கு வேண்டிய பணிவிடைகளைப் புரிந்து குருவிற்கு மகிழ்ச்சியை உண்டாக்கி அதன்மூலம் நல்ல கல்வியைப் பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்தனர் என்பது இதிஹாஸபுராணங்களின்மூலம் நாம் அறிகின்றோம். அக்காலத்தில் மனிதன் வாழ்க்கைக்கு வேண்டிய தேவை மிதமாக இருந்தாலும் பிற்காலத்தில் அதுவே பலமாக விரிந்திருப்பதாலும் பண்டைக்கால குருகுல முறையே இக்காலத்திலும் பொருத்தமாயிருக்குமென்று கூற முன்வரவில்லை. ஆனால் இதிஹாஸங்களால் கூறப்பட்ட குருகுலமுறையில் எக்காலத்திலும் பயன்படும் சில தத்துவம் உண்டு என்பதை எடுத்துக்கூறவே இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

பாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் நடந்த யுத்தத்தில் துரோணாசாரியர் பாண்டவர்களின் கட்சியைச்சார்ந்த திருஷ்டத்யும்னனால் கொல்லப்பட்டார். இதைக் கேள்வியுற்ற அச்வத்தாமா அபாண்டவாஸ்த்ரத்தினால் பாண்டவகுலத்தை அழிக்க முயன்றபோது ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவினருளால் பாண்டவர்கள் அஸங்நிஹிதர்களாய் உயிர் தப்பினர். அச்வத்தாமாவின் அஸ்த்ரமோ இளம் பஞ்சபாண்டவர்களை அழித்ததுமன்றி அபிமன்யுவின் மனைவியான வத்ஸலையின் கர்பத்திலிருக்கும் ஆண்குழந்தையையும் அழிக்க ஆரம்பித்தது. இத்தாபம் தாங்கமாட்டாமல் வத்ஸலை ஸ்ரீ க்ருஷ்ணனை சரணடைந்தாள். உடனே ஸ்ரீக்ருஷ்ணன் வத்ஸலையின் கர்பத்திலுள்ள பாலனை சக்ராயுதத்தால் காப்பாற்றினார். சிலகாலம் சென்றபிறகு வத்ஸலை ப்ரஸவித்த ஸமயத்தில் கரிக்கட்டையாக இருந்தது. ப்ரஹ்மசர்யவ்ரதம் குறைவற்றவர் அதைத் தொட்டால் அது குழந்தையாகப் பரிணமிக்குமென்று வியாஸர் முதலியோர் உரைக்க நைஷ்டிகப்ரஹ்மசாரிகள் தொட்டும் அக்கரிக்கட்டை குழந்தையாக ஆகாததால் ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா அதைத் தொட குழந்தையாகிவிட்டது. பரிக்ஷை செய்தபிறகு குழந்தையானதால் அக்குழந்தைக்கு ‘பரீக்ஷித்’ என்னும் பெயர் உண்டாகிவிட்டது. சில நாட்கள் கடந்தபிறகு அதைக் கேட்ட ‘பரீக்ஷித்’ வளர்ந்து தக்கவயதடைந்து குரு இராஜ்யத்தை அரசு புரிந்து வந்தான். இப்படி இருக்கையில் ஒரு நாள் வேட்டையாடுவதற்காக கானகத்திற்குச் சென்றான். அங்கு வேட்டையினால் களைப்படைந்து தாகத்தையடைந்தான். அவ்வமயம் தாகத்தைத் தணிக்க ஸமீபத்தில் தீர்த்தம் அகப்படாமல் போகவே அருகில் தவம்புரிந்துகொண்டிருந்த ரிஷியைக் கண்டு தாகத்தைத் தணிப்பதற்குத் தண்ணீர் கேட்டான்.

ரிஷியானவர் தவத்தில் மெய்மறந்து ஈடுபட்டிருந்தபடியால் இவ்வரசன் வினாக்களுக்குப் பதிலளிக்க முடியவில்லை. அரசன் வெகு நேரம் காத்திருந்தும் பதிலில்லாமையால் அறுகில் இறந்து கிடந்த நாகத்தை ரிஷியின் கழுத்தில் அணிந்துவிட்டு வேறு இடத்திற்குச் சென்று தன் தாகத்தைத் தணித்துக்கொண்டு தன்னூரைக் குறித்துச் சென்றுவிட்டான்.

பிறகு கடுந்தவம் புரிந்த ரிஷியின் புதல்வன் தன் தந்தையை வணங்க வந்தபொழுது தன் தந்தையின் கழுத்திலிருந்த நாகத்தைக் கண்டு திடுக்கிட்டு, ‘இந்நாகத்தை எவன் என் தந்தையின் மேல் அணிந்தானோ அவன் நாகத்தாலேயே கடிக்கப்பட்டிறப்பானாக’ என்று சாபமிட்டு தன் தந்தையின் கழுத்திலிருந்த நாகத்

தையகற்றினன். சில நேரம் கழிந்த உடன் தவத்திலிருந்து கலைந்த ரிஷி தன் குமாரன் மூலம் இவ்விஷயத்தையும் பரீக்ஷித்திற்குக் கொடுத்த சாபத்தையுங் கேட்டு மனம் நொந்து கொண்டு பரீக்ஷித் அரசன்தான் இக்காரியத்தைச் செய்தவன். அவனே நல்ல குணசாலி ஆயினும் தாகத்தின் கொடுமையால் இக்காரியத்தில் ஈடுபட்டான். காரணமின்றி அவன் குணத்தை அறியாமல் சாபங்கொடுத்தாயே' என்று கூறினர். சாபத்தை மாற்ற முடியாததாலும் தபசுக்கு விச்சித்தி உண்டாகக் கூடாது என்ற எண்ணத்தாலும், மறுபடியும் தவஞ்செய்யத் தொடங்கினர். பிறகு இச்சாபத்தின்படியே பரீக்ஷித் பாம்பினலேயே தீண்டப்பட்டு இறந்தான். அதை அறிந்த 'ஜனமேஜயர்' தந்தையின் மரணத்திற்குக் காரணமான ஸர்ப்பங்களின் ஸமூஹத்தை நாசம் செய்யக் கருதி ஸர்ப்பயாகம் செய்யத் தீர்மானங்கொண்டு அதற்குப் புரோஹிதராயிருக்கும்படி அயோதரின் சிஷ்யரான (தௌம்யரின் சிஷ்யரான) பைதரை வேண்டிக்கொண்டு அதன்படி யாகம் நடந்ததாகக் கதையின் போக்கு. அந்த பைதர் தன் குருவினிடத்தில் கல்வி பயின்றவிதம் முற்காலத்திய குருகுலமுறையை அழகாகச் சித்தரிக்கிறது.

தௌம்யர் என்கிற இருப்புப் பற்களை உடைய ரிஷியினிடம் ஆருணி, உபமந்யு, பைவர் என்னும் மூன்று சீடர்கள் கல்வி பயின்று வந்தனர். தௌம்யர் தன் சீடர்களை பரீக்ஷை செய்வதில் நோக்கம் கொண்டு காற்றும் மழையும் நிரம்பிய ஒரு தினத்தில் மூன்று சீடர்களுள் ஒருவனை ஆருணி என்பவரை அழைத்து பின்வருமாறு உரைத்தார். 'ஆருணி! இன்று நம் வயலில் விதைகள் விதைக்கப்பட்டிருக்கின்றன. இன்றோ அதிக மழை பொழிகின்றது. அம்மழையினல் உண்டான வெள்ளம் நம் வயலில் அணுகாமலிருக்க வரம்பொன்றை (மடை) நிர்மாணித்து வா' என்று கூறினர். ஆசார்யரின் ஆஜ்ஞையின்படி ஆருணி வயலுக்குச் சென்று வரம்பைக் கட்டத் தொடங்கினர். பல முறை வரம்பு கட்டியும் வெள்ளத்தின் அதிகத்தால் வரம்புகள் உடைந்துகொண்டே இருந்தன. இவைகளைக்கண்டு ஆருணி தானே வரம்பாயிருக்கும் தன்மையை அடைந்து வெள்ளத்தைத்தடுத்து ஆசாரியனின் ஆஜ்ஞையைப் பூர்த்திசெய்து கொண்டிருந்தார். அவ்வமயம், சிஷ்யர் சென்று வெகுகாலம் வராத தகவல் தெரியாததனல் தௌம்யர் மற்றைய இரண்டு சீடர்களுடன் தன் வயலை கண்காணிக்க அடைந்தார். உடனே ஆசாரியன், ஆருணியை ஆவலுடன் அழைக்க சிஷ்யனும் 'அடியேன்' என்று சொல்லிக் கொண்டே நடந்த செய்தியை நன்கு விளக்கினர். செய்திகளனைத்தும் கேட்டு ஆசாரியன் ஆநந்தபரவசராய் அவரிடம் கிருபை கூர்ந்து ஹே ஆருணி! இவ்வளவு பக்தியுடன் கல்வி கற்றதால் எல்லா வித்யைகளும் உனக்கு முகஸ்தமாக (காரியகரமாக) ஆகிவிடு'மென்று ஆசீர்வதித்து ஆருணியை அவர் இருக்குமிடத்திற்கு அனுப்பிவிட்டார். இவ்விதமே ஒரு ஸமயம் தனக்குப் பணிவிடை செய்துவந்த உபமந்யுவை அழைத்து பசுக்களை மேய்த்துவர என்று நியமித்தார். ஆசாரியன் உத்திரவுப்படி உபமந்யு மாடுகளை ஸாயங்காலவேளையில் கொட்டகையினுள் கட்டித் தீனியிட்டுவிட்டு ஆசாரியனை நமஸ்கரித்துவிட்டு கல்வியைக் கற்றுவந்தார். ஒரு நாள் ஆசாரியர் உபமந்யுவை அழைத்து 'நான் சொல்லும் காரியங்களைச் செவ்வனே செய்துவருகின்றாய், ஆனுலும் நீ என்னைவிட பருத்து இருக்கின்றாயே இதன் காரணம் என்ன' என்று கேட்டார். உபமந்யு-'भैक्षाचरणम्' செய்து (பிக்ஷை வாங்கி) ஜீவனைக் காப்பாற்றி வருகிறேன். அதுதவிர வேறொன்றும் நானறியேன்' என்றார். அதைக் கேட்ட ஆசாரியர் 'அந்த பிக்ஷையையும் எனக்குக் கொடுத்து மிகுதியை உண்' என்று கட்டளையிட்டார். உபமந்யுவும் அப்படியே செய்வதாகச்சொல்லிவிடைபெற்றுச்சென்றான். மறுதினம் முதலாசாரிய ஞஜ்ஞைப்படியே பிக்ஷைகளை வீடுகளில் வாங்கி அதைஅப்படியே ஆசாரியர்ஸந்நிதியில் வைத்தான். ஆசாரியர் அதை முழுவதையும்தானே சாப்பிட்டுவிட்டு உபமந்யுவைபட்டிணியாகவே அனுப்பிவிட்டார். உப

மந்யுபட்டினியாகவேமாடுகளைமேய்த்துவந்தார். இப்படியே தினந்தோறும் நடந்தது. ஒரு நாள் பசுக்களை அடைத்துவிட்டு, அவைகளுக்குத் தீனி வைத்துவிட்டு ஆசாரியனை ஸேவித்தான். ஆசாரியர் மறுமுறை அவனைப்பார்த்து ‘உபமந்யு! நீ இப்பொழுதும் பருத்தவனாகவே தென்படுகிறாயே, என்ன செய்கிறாய்’ என்று கேட்டார்.

உபமந்யு— ‘முதலில் பிக்ஷாசரணம் செய்து உமக்கு ஸமர்ப்பிக்கிறேன். மறுபடியும் பிக்ஷாசரணம் செய்து நான் சாப்பிடுகிறேன் என்று பதில் சொன்னான்.

ஆசாரியன்— நீ நாளைமுதல் ஒரு தடவைதான் பிக்ஷாசரணம்செய்யலாம். மறுபடி பிக்ஷாசரணம் செய்தால் மற்ற உன்னைப்போன்ற பிக்ஷார்த்திகளுக்குப்பாதகமுண்டாகும். ஆகையால் நான் கொடுத்ததைத் தவிர வேறொருவரிடமும் பிக்ஷை வாங்காதே’ என்று உத்திரவிட்டார். உபமந்யு மறுதினம்முதல் ஒரு தடவையே பிக்ஷாசரணம் செய்து அதையும் ஆசாரியனுக்கு ஸமர்ப்பித்துவிட்டு அதில் மிகுதியிருந்து கொடுத்தால் சாப்பிடுவது, மிகுதியில்லையெனில் சாப்பிடாமலேயே பசுக்களைக் காட்டிற்கு ஓட்டிப்போவது வழக்கம். இப்படியே நடந்துவந்தான். ஒரு நாள் வழக்கப்படி ஆசாரியனை நமஸ்கரிக்கும்பொழுது ஆசார்யர் ‚முன்போலவே பருத்து இருக்கிறாயே? என்ன சாப்பிடுகிறாய்’ என்று கேட்டார்.

உபமந்யு:— தேவரீர் நியமித்தபடியே வேறு இடத்திலும் பிக்ஷை எடுப்பதில்லை. முதலில் எடுக்கும் பிக்ஷையை ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்து விடுகிறேன். ஆகையால் பசிவேளையில் நான் மேய்க்கும் பசுவின் பாலை சாப்பிட்டு ஜீவித்திருக்கிறேன் என்று கூறினார்.

ஆசாரியன்— ‘என் உத்திரவின்றி நீ பசுவின் பாலை எப்படிப் பருகுவாய்? இனி என் உத்திரவின்றி பசுவின் பாலைப்பருகக்கூடாது’ என்று உத்திரவு பிறப்பித்தார். உபமந்யுவும் ‘அவ்விதமே செய்கிறேன்’ என்று ப்ரதிஜ்ஞை செய்துவிட்டு முன்போல் மேய்ப்பதற்காக பசுக்களை ஓட்டிக்கொண்டு தன் கடமையைச் செய்துவந்தான். மறுபடியும் ஆசாரியன் முன்போல் வினவ, கன்று ஊட்டியபின் அதன் வாயிலிருந்து கீழ் விழுகின்ற பாலின் நுரையை உண்டு ஜீவனம் செய்கிறேனென்று பதிலளிக்க, அதன் பிறகு ஆசாரியன் நீ இவ்விதம் (கீழ்க் கூறியவிதம்) செய்தாயேயாகில் கன்றின் ஜீவனத்திற்குத்தடை பண்ணியதாக ஆகும். மேலும், அக்கன்றுகள் உன்னிடம் இருக்கும் அன்பினால் (ஸாரவத்தான ஸசக்தியுள்ளதான) பாலின் நுரைகளை உனக்கு வாயினால் கக்குகின்றன என்றுரைத்தார். (ஆசான்) இவ்விதமாக தௌம்யர் தன் சீடனான உபமந்யுவிற்கு நான்கு விதத்தாலும் ஆஹாரத்தை நிறுத்திவிட்டார்.

உபமந்யுவும் ஆசாரியன் நியமனப்படி இரண்டாம் தடவை பிக்ஷை எடுக்காமலும் பால் முதலிய சக்திக்கேற்ற பொருள்களை உண்ணாததாலும் அதிக பசியினால் பீடிக்கப்பட்டு அதைத் தணித்துக்கொள்ள (அவ்விடத்தில்) சுலபமாகக் கிடைத்த எருக்கின் செடியின் இலை, பால், காய், பூ, இவைகளை உணவாக உட்கொண்டு அதின் பயனாகக் குருடனான். இதுகாரணமாக கண் தெரியாமல் போனதால் வழி தவறி ஒரு கிணற்றில் விழுந்துவிட்டான்.

சென்று வெகுநேரம்வரை காணாத உபமந்யுவை தேடிவந்தவரான தௌம்யர் உயர்தரமான குரலினால் கூச்சலிட்டார். அதைக் கேட்ட உபமந்யு கிணற்றினுள் கிடந்தவாறே ‘அடியேன்’ இதோ கிணற்றினுள் இருக்கிறேன் என்று பதிலளிக்க, இதைக் கேட்டு ஆசார்யதௌம்யர் தன் சிஷ்யனை கிணற்றிலிருந்து வெளியேற்றி கண் குருடான காரணத்தைக் கேட்டார். பிக்ஷை எடுத்துத் தேவரீருக்கு சமர்ப்பணம் செய்துவிட்டு, இரண்டாம் தரம் பிக்ஷைக்குப் போய் ஜீவனம் நடத்திவந்தபோது, அதை நிறுத்திவிட நியமனம் கொடுத்தபடியாலும், வேறு கதியின்றி பசுவின் பாலை உண்டு ஜீவனம் செய்த என்னை அதையும் கூடாதென்று நியமித்ததாலும், மற்ற கதியின்றி கன்றின் வாயிலிருந்து கீழே

(தொடர்ச்சி 237 வது பக்கத்தில்)

ஸ்ரீ:

மஹான்களின் மஹிமை

ஸ்ரீயப்பதியான திருவேங்கடமுடையான், 'கலௌ கோலாஹலம் ஸர்வம் கரிஷ்யந்தி' என்கிறபடியே மாயாவிகளால் கலிகோலாஹலம் வ்ருத்தியடையும் ஸமயம், 'திருவோணத் திருவிழவில், 'நீ பிறந்த திருவோணம்' 'ச்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணுதைவதா' என்று ஜகத்ப்ரஸித்தமாய் ஸ்வாஸாதாரணமான புரட்டாசித் திருவோண நன்னாளிலும், திருக்கேட்டை தன்னிலும் ஆசார்யகுணபூர்த்தியுள்ள இரு தேசிக ரத்னங்களை பரமக்ருபையாலே அவதரிப்பித்து அம்முகத்தாலே த்ராமிட ஸம்ஸ்க்ருத மணிப்ரவாளப்ராக்ருதரூப அனேக க்ரந்தங்களைச் செய்துவைத்து ஸகல வேத வேதாந்த ஸாரபூதமான 'ஜ்ஞாநவைராக்யதீப: ஸம்ப்ரதாய ப்ரதீப:' என்று ப்ரஸித்தமான ஸித்தாஞ்சனத்தை இருள் தருமாஞாலத்தில் ஆழங்கால் பட்டிருக்கிற சேதனர்கள் ஸுலபமாகப்பற்றி உஜ்ஜீவிக்கும்படிக்கும், சிஷ்யபரம்பராமுகேந எக்காலத்திலும் இருக்கும்படிக்கும் பண்ணி வைத்து, ஸர்வருக்கும் மஹோபகாரகனாகிறார். 'ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே। ஸமர்த்தோ த்ருச்யதே கச்சித் தம் விநா வேங்கடேச்வரம்॥' அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டத்தைத் தருகையில் இவன் தவிர ஸமர்த்தனான வேறு எவரும் கிடையாது. ஸர்வசரண்யனான இவன் விஷயத்தில் 'பத்ரம் புஷ்பம் ஃபலம் தோயம்' என்கிறபடியே ஸர்வஸுலபமான பத்ர, புஷ்ப, கேவலம் தீர்த்தம் முதலிய உபகரணங்களைக் கொண்டு அவன் திருவடிகளிலே நாம் ஏதேனும் ஒரு அடிமை செய்யினும் தன் நிரவதிக ஸௌசீல்யத்தால் 'ததஹம் பக்த்யுபஹ்ருதம்' என்கிறபடியே அதைத் திருவுள்ளம் பற்றுகிறான். இங்ஙனன்றிக்கே ஸர்வேச்வரனின் ஆராதனத்திற்கு உசிதமான உபகரண விசேஷங்கள் துர்லபம் என்றும், அதை அவிகலமாகச் செய்கையரிது என்றும் விஷண்ணராய் இருப்பவர் ஸர்வருக்கும் சோசநீயர் ஆகிறார்.

பவக்கடலில் மூழ்கிக் கிடக்கும் சேதனர்களை கை தூக்கிவிட சரண்யன் ஆசார்யர்கள் வேஷம் பூண்டல்லது முடியாததை நினைத்தே 'ஆசார்யஸ்ய ஹி தேவஸ்ய ஸந்நிதிம் ப்ராப்ய ந சோசிதவ்யம்' (?) என்கிறார் ஸ்வாமி. 'நாநாத்ருசம் ஸ்ரேணாத்ருயம்' பந்துமித்ரபுத்ரகளத்ராதிகளோடிருந்த ஸம்பந்தமும், வீடு நிலம் முதலிய பலவித பொருள்களில் வைத்த பாசமும், தாம் செய்யவேணும் என்று நினைத்திருந்த பலவகைக் கார்யங்கள் குறைபட்டு நிற்கின்றனவே என்கிற மனக்கவலையும் இது முதலிய பல காரணங்களால், மரணம் என்றால் மனிதர் பெரும்பாலும் துக்கமடைவது ஸஹஜம்.

பரலோகம் உண்டென்றும் பாபபுண்யங்களுக்கு பலன் கிடைத்தே தீருமென்றும் ஸ்வர்க்கநரகங்கள் புண்யபாப பலன்கள் என்றும் நம்பிக்கை உள்ளவர்களுக்கு, ஜீவித்திருந்த காலத்தில் தாம் செய்த பலவித பாபங்களை நினைத்து 'நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி' எவ்வளவு காலம் கழிந்தாலும் பாபங்கள் அநுபவிக்காமல் நசிப்பதில்லை. ஆகையால் அவற்றின் பலன்களை அநுபவிக்க நேரிடுமே என்கிற பயத்தினால் துக்கமுண்டாகக் கூடியது. சிலர் உலகவியாபாரத்தில் மூழ்கி பரலோகத்தைப்பற்றி நினைக்க அவகாசமே இராமல் விஷயஸுகங்களுக்காக பாபம் செய்கிறார்கள். சிலர் பரலோகத்தையும் பாபபுண்யங்களையும் ஈச்வரனையும் இல்லை என்று நினைத்து, சரீரஸுகத்திற்காக வேண்டியதை எல்லாம் செய்யலாம் என்று நினைத்து 'யஜ்ஞ கோடிநியதாநுஹவேஷ்வநாஸ்யம் தக்ஷிணாத் ஸ்வஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே' (அனேக

கல்பகாலங்கள் அநுபவித்தும் தீராத பாபங்களை அரைநொடிப் பொழுதில் செய்கிறார்கள்) என்கிறபடி பல பாபங்கள் செய்கிறார்கள். சிலர் தாம் நீண்டகாலம் ஜீவித்திருக்கப்போவதாகவும் கடைசி காலத்தில் பரலோகத்திற்கு வேண்டியதைச் செய்துகொள்ள யோசிக்கலாம் என்று நினைத்து உள்ளவரையில் ஸாம்ஸாரிக ஸுகத்திற்காக பாபச் செயலில் சிந்தித்து பிறகு மீளமுடியாமல் இருக்கின்றனர். நிர்க்ருணனான ம்ருத்யுவோ நமது எண்ணங்களையும், கார்யங்களையும், ஸமயஸந்தர்ப்பங்களையும் நோக்காமல் திடீரென்று வந்துவிடுகிறான். ஆகையால் அனேகமாக எவருமே மரணத்திற்கஞ்சுகிறார்கள். 'ஸம்பத: ஸ்வப்நஸங்காஶா: யௌவநம் குஸுமோபமம் । தடிச்சஞ்சலமாயுஶ்ச கஸ்ய ஸ்யாஜ்ஜாநதோ த்ருதி:' ॥ (செல்வம் ஸ்வப்நம்போல் தோன்றிமறையும். யௌவநம் புஷ்பம்போல் சில காலம் அழகாக இருந்து தளர்ந்துவிடும். ஆயுஸ் மின்னல் போல் நிலையற்றது. இதைத் தெரிந்துகொண்டால் எவன் தான் தைர்யமாக இருக்கமுடியும்.) ஆகையால் ஸுக்ருதவிசேஷ பரிபாகம் அடைந்த சேதனர்களே 'ஶ்வித்தா ஸ்ஸதவ்ரணா வொயயநு: ஸஹஸ்ரம்' என்றிருக்கும் மஹான்களின் கடாக்ஷம் பெறுகிறார்கள். அவர்கள் அநுக்ரஹவிசேஷத்தாலும் உபதேசத்தாலும் இச்சிற்றின்பத்திற்குரிய, பங்களா, தோட்டம், இஷ்டப்படி ஸஞ்சரிக்கக்கூடிய விமானம் முதலியவைகள் பரமாத்மாவின் ஸ்தானவிசேஷத்திற்கு நரகம் போன்றது என்றறிந்து 'ஶ்ரமாய ஸர்வஶாஸ்த்ராணி' என்கிறபடியே தன் ஜ்ஞானத்தை தர்மாநுஷ்டானமில்லாததால் ப்ரயோஜனமற்றதாகச் செய்யாமல் 'வாணிஜ்யம் யதேவஜிதம்' சாஸ்த்ரஜ்ஞானத்திற்கு ப்ரயோஜனமான சாந்தியைப் பெற்று தர்மார்த்தகாமமோக்ஷங்களென்கிற நான்குவித புருஷார்த்தங்களில் முக்யமான நான்காவது புருஷார்த்தத்தை அடைவதற்குறிய உபாயாநுஷ்டானத்தில் த்வரை பிறந்து பரிமித பலப்ரதர்களான ப்ரஹ்மருத்ர இந்திராதிகளான இதர தேவர்களை ஆச்ரயித்து பலன்களையே பெறுவதாகக் கண்டாலும்; அந்த பரிமிதமான பலன்களையும் அவர்களே ஸ்வதந்த்ரமாகக் கொடுப்பதில்லை என்பதை கீதாசார்யன் 'ப்ரபத்யந்தேந்யதேவதா: ... ... மயைவ விஹிதாந் ஹிதாந்' என்கிற வாக்யத்தை மனதில் த்ருடமாக வைத்து ஸர்வலோகசரண்யமாய் ஸர்வபோக்யாதிசாயிகளான சரண்யனுடைய சரணாரவிந்தங்களை உபாயமாகவும் ப்ராப்யமாகவும் பெற்று மஹான்களின் திருவுள்ளம் உகக்கும் ஸ்தானவிசேஷத்தை 'ஸாதவோ யத்ர வஸந்தே' நல்ல அநுஷ்டானங்களை உடையவர்களாயும், சாந்தியுடன் கூடியவர்களாயும் இருக்கிற ஆசார்யர்கள் எங்கு ஆராதிக்கப்படுகிறார்களோ, தர்மம் குறைவில்லையோ வேதங்கள், யாகங்கள், தபஸ், ஸத்யம், இந்த்ரியநிக்ரஹம் முதலியவைகள் நிறைந்த இடம் பெற்று, 'ஸஹஸ்ர ஹிதே தக்ஷிணாம் ஸரித்ஶ்ரேஷ்டாம் வஸதய' என்கிறபடியே ஹிதைஷிகளுடன் கூட வஸித்துவரும் ததீயர்கள் 'க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்' கீழ்ச்சொன்ன ஸம்ஸாரிகளைப் போலன்றிக்கே ம்ருத்யுவை இஷ்டமான அதிதியை (அதிதி) போல் வரவேற்கிறார்கள். இப்படிப்பட்ட ப்ரஹ்மவித்துக்களின் அபசாரம் தூரபரிஹரணீயம். 'உத்பதந்நபி வாகாஶம் நாதத்தம் உபதிஷ்டதே' ஆகாசத்தைக் குறித்தெழும்பிய போதிலும் பாதாளத்தை ப்ரவேசித்தாலும் பூமி முழுவதும் ஸஞ்சரித்தாலும் பூர்வஜந்மத்தில் கொடுத்து வையாதது இந்த ஜந்மத்தில் வருகிறதில்லை. இதை அறிந்தவர்கள் ப்ரஹ்மவித்துக்களிடம் அபசாரப்படுவதில்லை. ப்ரஹ்மவித்துக்களின் திருவடிகளில் அபசாரப்பட்டவர்கள் இக்கலியுகத்திலும் நாநாவிதமான கஷ்டங்களைப்பெற்று இருந்த இடம் தெரியாமல் போவதையும், மஹான்கள் திருவடிகளில் பக்தி உடையவர்களுக்கெவ்வளவு கஷ்டங்களிருந்தாலும் அதுகளைத் தாண்டி உலக ப்ரஸித்தர்களாக இருக்கிறதையும் நாம் பார்க்கிறோம்.

இம்மஹான்களின் மஹிமை அம்பரீஷாதி சரித்ரங்களில் ப்ரஸித்தம். ‘யொஹெ்யநம வா்ஷம வெ’ ‘ெஷவா சுவி ந ஶம விஷா:’ என்றுபகவத்ஜ்ஞானமுடையவனுடைய ப்ரபாவம் தேவர்களாலும் பரிச்சேதிக்க ஒண்ணுதென்ருர்களிறே’ என்று ஸ்வாமி தேசிகனே ஸாதித்தருளுகிறுர். ‘தததவெரு வஹிதெவி தாஜஹெயெ ஶக்ராஷயொ வாஷவவெஷெஹா:’ ப்ரஹ்மா பகவானைக் குறித்து அச்வமேதயாகம் செய்யும்பொழுது ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸுக்களெல்லாம் அந்த மந்திரங்களினுல் சொல்லப்படும் தேவதைகளை அடையாமல், பகவானுல் அங்கீகரிக்கப்பட்ட தேவதைகள் ப்ரஹ்மாவை எங்கள் பெயரைச்சொல்லி ஹோமம் செய்த ஹவிர்ப்பாகங்கள் எங்களுக்கு என் கிடைக்கவில்லை என்று கேட்கும்போது ப்ரஹ்மா ‘ந யஷ்வ்யா ஊபா யஷம சுஷாவிஷவிஷெவதா:। சுஜெ்யாவி ஹவா:ஹொயிம தத்காஊந கெநவிக’॥ என்று தன்னுலும் ஸம்ஸாரத்தைத் தாண்டவேண்டும் என்று ஆசையுடைய பரமைகாந்திகளினுலும் செய்யப்படும் யஜ்ஞங்களின் ஹவிஸ்ஸைப் பெறுவதற்கு நீங்கள் யோக்யதை உடையவர்கள் அல்ல. எங்களால் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸை பகவான் தானே அங்கீகரிக்கிறுர் என்று ஸமாதானம் சொல்லுகிறுர்.

பிராட்டியும் ஸுந்தரகாண்டத்தில் ‘யநா்: வஷ ஊஹாதாந: ... ... யெஷாம நஜ:வியாவியெ’ ‘வியாஜு ஹம ஹவெஷ:வெம ... ... நஹெஷாம ஊஹாதநாம’ உலகத்தில் அநுகூலமான வஸ்துக்களினுல் துக்கம் உண்டாவதில்லை. ஸந்தோஷம் உண்டாகிறது. ப்ரதிகூலமான வஸ்துக்களினுல் அதிகமான பயம் உண்டாகிறது. இவை இரண்டும் எவர்களிடமில்லையோ அவர்களே மஹான்கள். இவர்கள் விஷயத்தில் தனக்கு அவர்களிடமுள்ள கௌரவத்தை வெளியிடவும் இன்று பலஅபிப்ராயங்களை மனத்தில் வைத்தும் நம: என்னும் பதத்தை உபயோகிக்கிருள். ‘ஜகத்ஸமஸ்தமும் எவளின் கடைக்கண்பார்வையிலிருக்கிறதோ அவள் போற்றும் பெருமையையுடைய மஹான்களிடம் தனக்குள்ள ப்ரியத்தை வெளியிடுகிருர். கீதையில் ‘வியொ ஹி ஜ்ஞாநிநொதயஷம... ... ... ஜ்ஞாநீலாஜெவ ஊதம’ ‘வஹுநாம ஜநநாஊெ ... ... ஸ ஊஹாதா ஸுஷஹ:’ ஜ்ஞாநிகளுக்கு நான் எப்படி எவ்வளவு ப்ரியமானவன் என்று ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்திமானுன என்னுலும்சொல்லமுடியாது. ‘ஸ ஷாஸஷ ஊகி:ஷ்யெஷஶ்யொநொ ஊஹொரஹெ:। நவிவெஷாதநொ மாதா்ம தஷ:ஷுஷஹாஷஸம்ஷித:’॥ பகவானைத்யானம் செய்துகொண்டிருக்கும் ப்ரஹ்லாதன் தன்னை ஸர்ப்பங்கள் கடித்தும் மனஸ்ஸெல்லாம் பகவானிடம் சென்றுவிட்டபடியால் பாம்பு கடித்ததைத் தெரிந்துகொள்ளவில்லை. என்று பாஷ்யகாரரின் வ்யாக்யானம். ஜலத்திலிருந்து மத்ஸ்யத்தை வெளியில் எடுத்தால் பிரிந்த மத்ஸ்யம் கொஞ்சகாலம் ஜீவித்திருக்கலாம். இவர்கள் க்ஷணகாலங்கூட நானில்லாமல் தரித்திருப்பது அரிது. அதுபோல் எனக்கும் அவர்களைவிட்டு ஆத்மதாரணம் இல்லையாகையால் எனக்கு அவர்கள் ஆத்மா. அனேக ஸுக்ருதவிசேஷம். (புண்யம்) நிறைந்த ஜன்மங்களின் முடிவில்தான் ஜ்ஞானிகளாகிறுர்கள். இப்படிப்பட்ட மஹாத்மா மிகவும் துர்லபம் என்றுகண்ணனின் ஸ்ரீஸூக்தியைத் திருவுள்ளம் பற்றி ஸ்வாமி தேசிகனும் ‘யெ ஜநகொஷிஷுவாஜிஷத ஶுஷயஊ:தெஷாம ஹவஷாணஷகிரநநஹொஷா। கூஜிவிதெவிஷஶநாயகஷஹெ ஜெஷ: கூதாநவெயகயய ஷயஊதவஷஷ’ என்று ஸாதித்தருளுகிறுர்.

ஸ்ரீ:

கண்ணனும் கீதையும்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

கீதாவதரணம்

இதில் கீதாசாஸ்த்ரத்திற்கு உபோத்காத ரூபமானது கீதாவதரணம் என்னும் பாகம். முதலத்யாயமும் இரண்டாம் அத்யாயத்தில் முதல் பத்து ச்லோகங்களும் ஆக ஐம்பத்தேழு ச்லோகங்கள் கீதாவதரணமென்பவை. மேலே 'अशोच्यान्' என்று தொடங்கி 'मोक्षयिष्यामि मा शुचः' என்றவளவிலும் கீதாசாஸ்த்ரம். த்வைதாத்வைதபாஷ்யகாரர்கள் நிர்ணயமிது. नत्वेवाहं जातु नासंइत्यारभ्य अहंत्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः इत्येतदन्तं वचनमुवाच' என்பதாக இரண்டாமத்யாயத்தின் பத்தாவது ச்லோகத்தில் பகவத்ராமாநுஜ பாஷ்யம். பதினொன்றாவது ச்லோகம் 'அசோச்யாநந்வசோசஸ்த்வம்' என்பது. இது பகவத்வசநம். இந்த ச்லோகமும் கீதாவதரணத்திற் சேர்ந்ததென்பதாக பகவத்பாஷ்யகாரர் திருவுள்ளமாகத் தெரிகின்றது. இங்கு தாத்பர்யசந்த்ரிகை ஸ்ரீஸூக்தி இவ்வாறு:—

'अशोच्यान्' इति श्लोकस्यापि उपदेशार्थविधानापादनार्थपरिहासच्छायतया शास्त्रावतरणमात्रत्वेन साक्षाच्छास्त्रत्वाभावात् 'नत्वेवाहम्' इत्यारभ्य इत्युक्तम्। यद्वाऽत्र 'अशोच्यान्' इतिश्लोकःप्रहसन्निवेत्यस्य विषयः, नत्वेषाहमित्यादिकमिद 'शब्दार्थः' என்று. 'तमुवाच हृषीकेशः प्रहसन्निव ... ... इदंवचः' என்று பத்தாவது ச்லோகம். இங்கு கீதா பாஷ்யம் பின்வருமாறு:— 'परमपुरुषः प्रहसन्निवेदमुवाच—परिहासवाक्यं वदन्निव ... ... नत्वेवाहं जातु नासम्' इत्यारभ्य ... ... 'माशुचः' इत्येतदन्तं वचनमुवाचेत्यर्थः' என்று. இதற்குத் தான்முன் உதாஹரித்துள்ள தாத்பர்யசந்த்ரிகா ஸ்ரீஸூக்தியில் இரண்டுவிதமான நிர்வாஹம் காண்கிறது. அதாவது:— 'அசோச்யாந்' என்கிற பதினொன்றாவது ச்லோகம் ஸாக்ஷாத் சாஸ்த்ரமன்று. சாஸ்த்ராவதரணமாத்திரம். தாம் உபதேசிப்பதற்காக அர்ஜுனன் அதில் அவதாநம் செலுத்தவேண்டி பரிஹாஸ ரீதியில் அவதரித்துள்ளது இந்த ச்லோகம்; ஆதலால் 'நத்வேவாஹம்' தொடங்கி கீதா சாஸ்த்ரம் என்பதா பாஷ்யகாரர் திருவுள்ளம் அல்லது 'அசோச்யாந்' என்கிற ச்லோகமும் கீதாசாஸ்த்ரத்திற் சேர்ந்ததே. ஆனாலுமிதற்கு மற்றொரு ஆகாரமுமுண்டு. 'ப்ரஹஸந்நிவ' என்கிற மூலச்லோகத்தில் சொல்லிய பரிஹாஸவாக்யரூபமாகவும் அமைந்திருக்கையே அவ்வாகாரம். இவ்வாறு கீதாபாஷ்யதாத்பர்யமுமாகலாம்' என்பதாக இரண்டுபடியாக நிர்வாஹம் என்று.

த்வயஸ்ரீபாஷ்யத்தில் ச்ருதப்ரகாசிகாசார்யரருளியநிர்வாஹத்தையடியொற்றியதிந்நிர்வாஹமிரண்டும். சாரீரகசாஸ்த்ரத்தில் சதுஸ்ஸூத்ரியானது சாஸ்த்ரோபோத்காத ரூபை என்பதாகஸித்தாந்தம். ஸ்ரீபாஷ்யகாரர் இண்டாவது பாதத்தின் ஆரம்பத்தில் முதல் அதிகரணத்தின் அர்த்தத்தை அநுவாதம் செய்யுமிடத்தில் 'சாஸ்த்ராரம்பஸித்திக்காக மீமாம்ஸாச்ரவணம் ஆரம்பித்தல் வேண்டும்' என்று சொல்லப்பட்டதாக ஸ்ரீபாஷ்யமிட்டருளுகிறார். மற்ற மூன்று அதிகரணங்களும் சாஸ்த்ராரம்பஸித்திக்காக வேயன்றோ. முதல் அதிகரணத்திற்கு இந்தப் ப்ரயோஜனமருளியது எப்படி? என்பதாக வோர் ஆசங்கை எழுகின்றது. இதற்கு ச்ருதப்ரகாசிகையில் நிர்வாஹம் செய்வதாவது— 'ஜந்மாதிஸூத்ரம்தொடங்கிமூன்று ஸூத்ரங்களும் மூன்று அதிகரணங்களாய் சாஸ்த்ரோபோத்காதரூபங்களே. ஆனாலும் அவற்றிற்கு சாஸ்த்ரத்தோடு முதல் பாதத்தில் ஸங்கதியுமுண்டு. முதல் ஸூத்ரமோவெனில் கேவலம் சாஸ்த்ரோபோத்காதரூபமே என்கிற ஆசயத்தினால் ஸ்ரீபாஷ்யத்தில் இவ்வாறு அருளியது' என்பதா அங்குள்ள நிர்வாஹம். மற்றொரு நிர்வாஹமும் அங்கு கண்டுகொள்வது. அதையடியொற்றி 'அசோச்யாந்' என்

கிற ச்லோகமும் உபோத்காதரூபமாகவும் சாஸ்த்ரரூபமாகவும் அமையலாம் என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளமாகிறது. ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹரக்ஷையில் **'पार्थं प्रपन्नमुद्दिश्य शास्त्रावतरणं कृतम्'** என்கிற ஸங்க்ரஹ ஸ்ரீஸூக்திக்கு வ்யாக்யானமிட்டருளுமிடத்தில் **'तदत्र 'तमुवाच' इत्यादिश्लोकत्रयपर्यन्तो ग्रन्थश्शास्त्रावताररूपः'** என்கிற ஸ்ரீஸூக்தி காண்கிறது. ஆநந்தமுத்ராசாலையில் முத்ரிதமான மதத்ரயகீதாபாஷ்ய கோசபாடமிது. இதன்படி **'तमुवाच' 'अशोच्यान्' 'नत्वेवाहं'** என்கிற மூன்று ச்லோகபர்யந்தமான க்ரந்தமானது சாஸ்த்ராவதாரரூபம் என்று தேருகிறது. இங்கு பாடப் பிறழ்வு இருக்கலாமென்று தோன்றுகிறது. 'நத்வேவாஹம்' என்கிற ச்லோகத்தை சாஸ்த்ரவதாரரூபமாகக் கொள்ளவியலாதே. அநந்தரஸங்க்ரஹ ச்லோகத்தில் 'நத்வேவாஹம் ஜாது நாஸம் முதலியவற்றின் அர்த்ததையுள்கொண்டு இரண்டாவது அத்யாயத்தில் எனப்பட்டது' என்பதாக மேலேயுள்ள தாத்பர்யசந்த்ரிகை. ஆகவே 'த்ரய' என்பது அதிகம். அல்லது 'த்வய' என்று பாடமாகலாம். அன்றிக்கே 'ஏவமுக்த்வா' இத்யாதி ச்லோகபர்யந்த:' என்றிருத்தல் மிகவும் ஸ்வரஸம். கோசாந்தரங்களில் விவேகிகள் நிரூபிப்பது.

இங்குமற்றொருவிமர்சநமும்ப்ராப்தமாகிறது **'एवमुक्त्वा हृषीकेशं ...... तूष्णीं बभूव ह'** என்பது ஒன்பதாவது ச்லோகம். அங்குள்ள கீதாபாஷ்யத்தில் 'இவ்வாறு அஸ்தாநத்திலே ஸ்நேஹ காருண்யங்களால் தன்மையிழந்துள்ளவர்ஜுனனுக்கு மோஹத்தைப் போக்குவதற்காக பகவான் அத்யாத்மசாஸ்த்ரத்தை அவதரிப்பித்தான்' இது அஸ்தாநஸ்நேஹகாருண்ய தர்மாதர்மதியாகுலம், பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சாஸ்த்ராவதரணம் க்ருதம்' என்கிறகீதார்த்த ஸங்க்ரஹஸூக்தியினால் ஏற்படுகின்றது' என்பதாகவுள்ளது. இங்கு தாத்பர்யசந்த்ரிகை பின்வருமாறு—**'ईतः पूर्वस्य द्वितीयाध्यायैकदेशस्यापि शास्त्रोपोद्घातत्वम्, अतः परस्य शास्त्रावतरणरूपत्वञ्च विवेक्तुम् 'अस्थाने'त्यादिना संग्रहश्लोकेऽनिर्दिष्टप्रथमाध्यायेनैतावत्संगृहीतम्'** என்று.

ஸ்ரீமத்கீதார்த்தஸங்க்ரஹத்தில் ஒவ்வொரு அத்யாயங்களின் அர்த்தங்களை ஒவ்வொரு ச்லோகங்களால் ஸங்க்ரஹித்துவருமிடத்தில் அந்தந்தவத்யாயங்களின் திருநாமத்தையும் குறிப்பிடுவதுண்டு. இரண்டாவதில் மூன்றாவதில் என்றாற்போல் அருளிவருகின்ற பெரிய முதலியார் முதல் அத்யாயத்தினர்த்தத்தை ஸங்க்ரஹம் செய்யுமிடத்தில் பார்த்தனையுத்தேசித்து சாஸ்த்ராவதரணம் செய்தது' என்றருளுகிறாரன்றி முதலத்யாயத்திலே இவ்வாறு சொல்லியதென்பதாக ஸாதிக்கவில்லை. அதற்குக் காரணமென்னவெனில்-— முதலத்யாயமாத்திரம் சாஸ்த்ராவதாரரூபமன்று. இரண்டாமத்யாயத்தில் ஒரு பகுதியும், அவ்வாறானது என்பதை ஸூசிப்பதற்காக இவ்வாறு அருளியது' என்றிதன் கருத்து. இங்கு 'இத: பூர்வஸ்ய' 'இத: பரஸ்ய' என்பதாக பதவிந்யாஸங்கள் காண்கின்றன. 'தமுவாச' என்கிற ஒன்பதாவது ச்லோகத்திற்கு முன்புள்ளதான இரண்டாமத்யாயபாகமும் அபிசப்தத்தாலே ஒன்பதாவது, பத்தாவது பதினொன்றாவது ச்லோகங்களும்சாஸ்த்ரோபோத்காதரூபங்கள். அதற்குப்பின்னுள்ள பாகமானது சாஸ்த்ராவதரணரூபம் என்று பொருள். ஸங்க்ரஹத்திலும் பாஷ்யதாத்பர்யசந்த்ரிகைகளிலுமிங்குள்ள 'சாஸ்த்ராவதரண' சப்தங்கள் சாஸ்த்ராரம்பத்தைக் குறிக்கின்றன. சாஸ்த்ரோபோத்காதபரங்களன்று. எட்டாவது ச்லோகம் வரையில் உபோத்காதமென்றும் ஒன்பதாவது முதல் சாஸ்த்ரமென்றும் இதன்படியில் தாத்பர்யம் கொண்டால் பன்னிரண்டு முதல் சாஸ்த்ரம் என்பதாக முன் உதாஹரித்துள்ள பாஷ்யத்தோடு முரண்படும். கீதாபாஷ்யத்திலும் இதற்கு மேலேயுமிரண்டுஉபோத்காதச்லோகங்களிருக்கஇங்கு 'ஏவமுக்த்வா' என்கிற ச்லோகத்தின் பாஷ்யத்தில் பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சாஸ்த்ராவதரணம் க்ருதம்' என்கிற ஸங்க்ரஹச்லோகத்தையுதாஹரித்து வியாக்யானமிட்டருளியதெதற்கு என்கிற ஓர் ஆசங்கையும் எழுகின்றது. இங்குள்ள பாஷ்யதாத்பர்யசந்த்ரிகைகளுக்கு பூர்வோத்தராநுகுணமான தாத்பர்யம்

கொள்ளவேணும். அதாவது— இங்கு தாத்பர்யசந்த்ரிகையில் உதாஹ்ருதபாஷ்யத்திற்கு ஸமந்வயம் இவ்வாறு காண்கின்றது—

'एवमनेनोपोद्घातेनोचितावसरे वक्ष्यमाणशास्त्रावतरणसङ्गतिं अर्थादुपोद्घातसंग्रहश्लोकं च व्याकरोति -एवमिति' என்பதாக இங்கு கீதாபாஷ்யத்திற்கு அவதாரிகையுள்ளது. சாஸ்த்ராரம்பமானது நத்வேவாஹம் என்கிற பன்னிரண்டாம் ச்லோகம் முதற்கொண்டேயானாலும் அதற்கு ஒன்பதாவது ச்லோகம்வரையிலுள்ள பாகமே ஸாக்ஷாத்தாக உபோத்காதமாகும். கண்ணனுடைய நத்வேவாஹமித்யாதியானவுபதேசத்திற்குச் காரணம் அர்ஜுனனுடைய மோஹமும் அதன்மூலமான அவன் ப்ரார்த்தனையும் செயலுமேயன்றோ? 'தமுவாச' என்கிற பத்தாவது ச்லோகத்திலே இங்கிதத்தாலே கண்ணன் உபதேசிக்கப்புகுகிற அர்த்தத்திற்கு ஸூசநமும் அவ்வுபதேசம் அநாயாஸேந அவதரித்தமையும் ஏற்படுவதால் அதுவும் ஒருவகையில் சாஸ்த்ரமாகலாம். ஸாக்ஷாதுபதேசரூபமல்லாமையாலே உபோத்காதரூபமுமாகும். 'அசோச்யாந்' என்கிற ச்லோகமும் அவ்வாறானதே என்று முன்பே தெரிவிக்கப்பட்டது. ஆகவே பத்தாவது, பதினொன்றாவது ச்லோகங்களுக்கு உபோத்காதரூபத்வமே என்றோ சாஸ்த்ரரூபத்வமே என்றோ நியதியில்லை. ஒன்பதாவது ச்லோகம்வரை உபோத்காதரூபமே. பன்னிரண்டாவது முதல் சாஸ்த்ரரூபமே என்று நிர்ணயம்பெற்றது. ஆதலால் ஒன்பதாவது ச்லோகத்திலேயுள்ள பாஷ்யத்தில் தாவந்மாத்ரமே உபோத்காதமாகியதும் மேல் ச்லோகத்தில் 'நத்வேவாஹம்' தொடங்கி சாஸ்த்ரம் என்றருளியதும் உபபந்நங்களே என்று தோன்றுகிறது.

கீதாசித்ரம்

இனி கீதோபோத்காதரூபையான பீடிகைக்குப்ப்ரயோஜனமென்னவென்பதை விமர்சிக்கப்புகுந்த ஸ்ரீ சங்கராசார்யர் 'ப்ராணிகளுக்கு சோகமோஹம் முதலியவை ஸம்ஸாரபீஜமான தோஷங்கள். அவற்றிற்குக் காரணம் பந்துக்கள் பக்கல் யானெனது என்கிற அஹங்காரமமகாரங்கள். இவைகளைப் போக்குவது தத்வஜ்ஞானத்தினாலே என்பதைத் தெளிவிப்பதற்காக இந்த பீடிகை, என்றார். நம்மாசார்யர்கள் இந்த உபோத்காத ஸந்தர்ப்பத்தை ஸித்தாந்தத்திற்குப் பயன்படுத்திக்கொண்ட வைலக்ஷண்யமே வேறு. உபதேசமுகத்தாலே தத்வஹிதபுருஷார்த்தங்களைத் தெளிவிக்கின்றது கீதாசாஸ்த்ரம். அதின் உபோத்காதபாகமானது அபிநயமுகத்தாலே அவற்றை வெகு அழகாக மனதில் பதியவைக்கின்றது. உபதேசமுத்ரையினால் தெளிவு பிறப்பதுமுண்டன்றோ.

'उद्गृह्णतीमुपनिषत्सु निगूढमर्थं चित्ते निवेशयितुमल्पधियांस्वयं नः । पश्येम लक्ष्मणमुनेः प्रतिपन्नहस्तामुन्निद्रपद्मसुभगामुपदेशमुद्राम् ॥

எம்பெருமானாருடைய திருக்கையிலுள்ள உபதேசமுத்ரையானது மந்தமதிகளான நமக்கு உபநிஷத்துக்களின் உட்பொருளை எடுத்துக்காட்டுகின்றது என்பதாக இந்த யதிராஜஸப்ததி ச்லோகத்தில் ஸ்ரீ தேசிகன் ஈடுபாடு. தக்ஷிணாமூர்த்தியின் உபதேசத்தைப்பற்றியொருவர் பின்வருமாறு பேசுகிறார்— 'ஆலமரத்தின் கீழ் ஒரு அத்புதம், ஆசார்யன் யுவா. சிஷ்யர் வ்ருத்தர்கள். குரு மௌன முத்ரையில் செய்யும் உபதேசம். சிஷ்யர்களோ ஸந்தேஹம் தெளிந்துள்ளார்கள்' என்பதாக. ஸர்வஸித்தாந்தத்திலும் அங்குளீ நிர்தேசம் முதலியவற்றால் ப்ரதமவ்யுத்பத்தி ஏற்படுவதாகக் கொள்ளப்படுகின்றது. நியந்தாவும் நியாம்யனுமான இருவருடைய வாசிககாயிகவ்யாபாரங்களால் சப்தார்த்தக்ரஹணம் ஆதியில் ஏற்படுகின்றதாக நையாயிகர் முதலியவர்களும் கொண்டுள்ளார்கள். அந்த க்ரமத்தில் இந்தவுபோத்காதத்திற்காணும் வ்யாபாரவிசேஷங்களால் பற்பல தத்வார்த்தங்கள் தெளிவாகின்றனவென்பதாகக் கொண்டார்கள் நம்மாசார்யர்கள். ஸங்கல்பஸூர்யோதயமென்னும் நாடகத்தை ஸ்ரீ தேசிகன் அமைத்தருளியது இந்த கீதாசித்ரத்தைக்கொண்டே. திருத்தேர்தட்டில் முன்பு கண்ணனும் பின்னே அர்ஜுனனும் வீற்றிருப்பது ப்ரணவத்தின் அர்த்தத்தை தெளிவிக்குமோர் சித்ரம்.

ப்ரதாநப்ரதிதந்த்ராதிகாரத்திலே—, இதில் ப்ரதமபதத்தில் அர்த்தங்களை அர்ஜுனரதத்திலும்' என்று ஆரம்பித்து 'இது திருமந்த்ரார்த்தாநுஸந்தாநத்திற்குக் குறிப்பாகவப்புள்ளார் அருளிச்செய்தவிரகு' என்று அருளிச்செய்திருப்பதை நினைக்கவும். ப்ரதாநசதகத்திலேயும் 'விச்வசேஷியான நாராயணனையும் சேஷபூதனான நரனையும் அர்ஜுனரதம்போலே முன்னும் பின்னுமாகக் காட்டுகிற ப்ரணவத்தில் சேஷமாகச் சொல்லப்பட்ட ஜீவன் சப்தவ்ருத்தியாலே ப்ரதாநனுய்த்தோற்றும்' என்பதாக அர்ஜுனரதத்தை த்ருஷ்டாந்தமாக்கி அர்த்த சிக்ஷை பண்ணியருளுகிறார் ஆசார்யன்:—

अभिरक्षतुमग्रतः स्थितं त्वां प्रणवे पार्थरथे च भावयन्तः। अहितप्रशमैरयत्नलभ्यैः कथयन्त्याहवपुङ्गवं गुणज्ञाः॥

ஆச்ரிதரக்ஷணார்த்தமாக அர்ஜுனரதத்தில் முன் வீற்றிருப்பதினாலே ப்ரணவார்த்தமானது ப்ரகாசிதமாகின்றது என்பதாக ஆசார்யர்கள் அருளுகிறார்கள் என்று பரமார்த்தஸ்துதியிலும் அநுஸந்திக்கப்பட்டது. பார்த்தன் தேர்முன் தோன்றியதனால் தெளிவாகும் தத்வார்த்தமிது என்பது நம்மாசார்யர்கள் காட்டிய வழியாகும்.

தத்வத்ரயசித்திரம்

சித்தும், அசித்தும், இறையுமாகிய தத்துவங்கள் மூன்றின் நிலைகளையும் சித்தத்தில் பதியவைக்குமோர் அற்புத சித்திரமுமாயமைந்துள்ளது பார்த்தன் தேர். மேலே கீதாசாஸ்த்ரத்தில் ப்ரதாநமாய் நிரூபணம் செய்யப்பெறப்போகின்றது தத்துவமே. 'नारायणः परं ब्रह्म गीताशास्त्रे समीरितः, என்பதாக தத்வநிரூபணமே கீதாசாஸ்த்ரத்தில் ப்ரதாநமெனஸ்ரீ ஆளவந்தார் கீதார்த்தஸங்க்ரஹத்தில் அருளினார். 'தத்துவமும் ஹிதமும் அத்யாத்மசாஸ்த்ரங்களின் ஸாரார்த்தமாகும். இவ்விரண்டுமே கீதையிலும் நிரூபணம் செய்யப்பெறுகின்றன. அவற்றுள் உபநிஷத்துக்கள் தத்வத்தை முக்யமாகவும் மற்றதை அமுக்யமாகவும் காட்டுகின்றன. ஆனதுபற்றியே சாரீரகஸூத்ராரம்பத்தில் 'ப்ரஹ்மவிசாரம் செய்யவேணு' மென்று ப்ரஹ்மப்ரதாநமாக ஸூத்ரமிட்டது. கீதையிலும் அவ்வாறே தத்வநிரூபணமே ப்ரதாநமென்பதற்காக 'நாராயணன் கீதாசாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டதாக' மேலேயுதாஹரித்துள்ள ஸங்க்ரஹச்லோகத்தில் ஸ்ரீ ஆளவந்தார் அருளியது' என்பதாக கீதார்த்தஸங்க்ரஹரக்ஷையில் ஸ்ரீ தேசிகன் அருளினார் ஸங்க்ரஹச்லோகத்தில் 'நாராயணன்' என்றது சித்தையும் அசித்தையுமுடலாகக்கொண்ட வெம்பெருமான் என்றபடி. நாராயணசப்தத்திற்கு இரண்டு விதமான ஸமாஸங்கள் ஆழ்வார் ஆசார்யர்களாலே நிரூபிக்கப் பெற்றன. ஒன்று பஹுவ்ரீஹி. [அன்மொழித்தொகை.] மற்றொன்று தத்புருஷன். [வேற்றுமைத்தொகை.] 'எண்பெருக்கந்நலத்தொண்பொருளீறில வண்புகழ் நாரணன்' என்பதாக முந்திய ஸமாஸத்தின் பொருள் 'நாரணன்முழுவேழுலகுக்கும்நாதன்' என்று மற்றொரு ஸமாஸத்தின் பொருள். சித்து அசித்து இவற்றையுடலாகக்கொண்டவன் என்பது பஹுவ்ரீஹிப் பொருள். இவற்றிற்கு ஆதாரமாயிருப்பவன் என்பது தத்புருஷார்த்தம். இவ்வாறாக சேதநங்களும், அசேதநங்களுமாகியவற்றை தனக்குச் சரீரங்களாகக்கொண்டவெம்பெருமானொருவனே தத்துவமென்பதுதான் விசிஷ்டாத்வைதம். இப்படி விசிஷ்டமான வஸ்துவில் விசேஷணங்களாகிய இரண்டு தத்துவங்களுடைய நிலைகளையும், விசேஷ்யமாகிய ஸ்ரீகாந்தன் நிலையையும் பார்த்தனுடைய திருத்தேரிலே தெளியலாகும். இதையும் ஸ்ரீ தேசிகன் ஸாங்கப்ரபதநாதிகாரத்தின் இறுதி ச்லோகத்தில் விளக்கியருளினார், 'युग्यस्यन्दनसारथिक्रमवति व्यक्तसन्दर्शिते तत्वानां त्रितये' என்று, தேரை இழுத்துச் செல்லும் குதிரைகள்போன்றன ஜீவர்கள். அவற்றால் நடத்தப் பெறும் தேரைப் போன்றன அசித்துக்கள். இவ்விரண்டையும் நடத்தும் 'தேர்ப்பாகனைப்போன்றவனீச்வரன்' என்பதாக தத்வத்ரயத்தின் நிலையை வெகு அழகாக நமது சித்தத்தில் பதியவைத்தருளினாராசார்யன். (தொடரும்)

ஸ்ரீ:

'பெரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன் பெறும்'

ஸ்ரீ ஸந்நிதியில் எந்த உபதேசத்திலும் அருளிச்செயல்களை முக்கியமாக எடுத்துக்காட்டுவதோடு தம்முடைய அநுபவத்திற்கும் அதை ஸஹகாரியாக (உசாத்துணையாக) வைத்துக்கொள்வது வழக்கம். 24-8-56 தினம் ஸ்ரீ ஸந்நிதியோடு ஸஞ்சாரத்தில் வரும் பாடசாலை வித்தியார்த்திகளைப் பார்த்து 'பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும், அதிலும் உபாத்தியாயருடைய சொல்லுக்கு அடங்கி அவர் சொற்படியே நடந்து வந்தால் உங்களுக்கு எல்லா ச்ரேயஸ்ஸுக்களுமுண்டாகும்' என்றும் ஸாதித்துவிட்டு அதற்காக 'பெரியார்க்காட்பட்டக்கால்' என்ற அடியை ஸாதித்துவிட்டு பாசுரம் முழுவதும் ஒரு தரம் சொல்லும்படி நியமித்தாயிற்று. அப் பாசுரம் பின் வருமாறு:-

பிரியாதாட்செய்யென்று பிறப்பறுத்தாளறக்—
கோண்டான்
அரியாகி யிரணியனை யாகங்கீண்டானன்று,
பேரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன்—
பெறுமாறு
வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான்—
காட்டினனே'
[திருவாய்மொழி 10-6-10]

அந்தப் பாசுரத்தை முழுவதும் சொன்னதும் 'இந்தப் பாசுரத்தின் நாலாவது அடியில் 'வாட்டாற்றான்' என்னுமிடத்தில் 'எவ்வுள்ளான் காட்டினனே' என்று ஊஹம் பண்ணிக்கொண்டு, அதற்குத் தாம் அநுஸந்திக்கும் அர்த்தத்தை அருளிச்செய்யும்படி இருந்தது. தம்மைப் பெருமாள் ஆராதனம் செய்வதற்காக அங்கீகரித்து துரீயாச்ரமத்தைக் கொடுத்ததும் ஆராதன ஆஸ்தானநிர்வாஹாதிகளை நடத்தும்படி செய்ததும் தமக்கு முன்னுள்ள மூன்று அழகியசிங்கர்களுக்குத் தாம் ஆட்பட்டதின் பலமென்று இப் பாசுரத்தின் கருத்து' என்று ஸாதித்துவிட்டு அதற்கநுகுணமாக பதார்த்தத்தையும் விளக்கியாயிற்று.

அரியாகி— ஸிம்ஹமாகி, இரணியனை, ஆகம் கீண்டான்— சரீரத்தைப் பிளந்தவனான லக்ஷ்மீந்ருஸிம்ஹன், அன்று என்பதை கீண்டான் என்பதோடு மட்டில் அந்வயிக்காமல் கொண்டான் என்பதுடனும் அந்வயித்து, அன்று— துரீயாச்ரமஸ்வீகாரம் பண்ணிக்கொள்ளும் அன்று என்று பொருள். எக்காலத்தும் பிரியாது- பிரிந்து போகாமல், அதாவது ஸொந்த ஊரை நினைத்துக்கொண்டு போகாமல், ஆட்செய்- ஆராதனாதி கைங்கர்யங்களைச் செய்யென்று, பிறப்பறுத்து- பிறப்பாவது ஜந்மம். உபநயனத்தை (ப்ரம்மசர்யத்தை) 'இருபிறப்பொரு மாணாகி' என்றபடி இரண்டாவது பிறப்பாகச் சொல்லும் ரீதியில்; துரீயாச்ரமத்துக்கு முன்னுள்ள க்ருஹஸ்தாச்ரமமான பிறப்பை அறுத்து, ஆள் அறக்கொண்டான்- அடிமை முற்றும் கொண்டான். கொண்ட இடத்தையும், கொள்ளுதலுக்குக் காரணத்தையும், கொண்டதைக் காட்டினவனுடைய விபரத்தையும் காட்டுகிறது மேல்- பெரியார்க் காட்பட்டக்கால் இத்யாதி. பெரியார்க்கு— ஸ்ரீ காரைக்குரிச்சி பெரிய அழகியசிங்கர் முதலிய மூன்று அழகியசிங்கர்களுக்கு. *(இவ்விடத்தில் ஸ்ரீ அழகியசிங்கருடைய தனியனை அநுஸந்தித்துக்கொண்டு பொருத்தத்தைக் காணவேண்டியது.) ஆள்பட்டக்கால்- அந்யைரலப்யமான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் ஆராதன ஆஸ்தானநிர்வாஹாதிகளான பயனைப்

---

* ஸ்ரீமத் ஸ்ரீரங்கப்ருத்வீச்வரசடரிபுணா ஸம்யமீந்த்ரேண த்ருஷ்டம்
ந்யஸ்தாத்மானம் ந்ருஸிம்ஹே நரஹரிசடஜித்யோகிநேது: ப்ரஸாதாத் ।
ப்ராஜ்ஞஸ்ரீரங்கசாரிப்ரபவயதிபதே: ப்ராப்தலக்ஷ்மீந்ருஸிம்ஹா-
ஸ்தானம் ஸேவே யதீந்த்ரம் ஸகலகுணநிதிம் வீராக்விட்சடாரிம் ॥

பெறும் பிரகாரத்தை, வரிவாள்வாயரவணை மேல் துயில் கொண்டவனை திருவெவ்வுள்ளான், நாட்டாருக்குக் காட்டினனே— திருவுள்ளூரில் ஆச்ரமஸ்வீகாரத்தைப் பண்ணி வைத்து, அதாவது பெற்று, தன்னுடைய திருநாமத்தையும் அநுபவைகதானரான ஆழ்வாருடைய திருநாமத்தையும் சேர்த்துப்பெயரிட்டு, நாட்டிற்குக் காட்டினனே' என்று விவரித்துக் காட்டியருளியாயிற்று.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஆச்ரமஸ்வீகாரகாலத்தில் ஸாதித்தவைகளையும் நடந்தவைகளையும் தெரிவிப்பது பொருந்தும். ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதிக்குப் பெருக வாழ்ந்தானில் காலக்ஷேபத்திற்கு எழுந்தருளியானது முதல் ஸ்ரீ அழகியசிங்கருடன் நெருங்கிப் பழகிவரப் பல ஸந்தர்ப்பங்கள் உண்டு. 40, 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்கள் ஸந்நிதியில் அநேக காலம் அந்தரங்க கைங்கர்யங்களில் இருந்ததுடன் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியிலும் மிகவும் நெருங்கியிருந்தபடியாலும் ஸ்ரீ அழகியசிங்கர் விஷயத்தில் எந்த மஹான்கள் எப்படித் திருவுள்ளம் பற்றியிருந்தார்கள் என்பதை எல்லோரையும் விட விசேஷமாக அறிந்துக்கொள்ள அடியேனுக்கு ஸந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்தன. 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் நேரிடையாகவே ஸ்தானத்தை ஸ்ரீ அழகியசிங்கருக்குக் கொடுக்க வேண்டுமென்று திருவுள்ளம்பற்றியிருந்ததும், ஸ்ரீ அழகியசிங்கர் (பூர்வாச்ரமம்) திருத்தகப்பனாரின் நிர்ப்பந்தத்தாலேயே அந்தத் திருவுள்ளத்தை மாற்றிக்கொண்டாயிற்று என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நடந்த விக்ருதிவருஷம் தைமாதத்தில் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனியில் பலமான அஸ்வாஸ்த்யம் நேர்ந்தது. அப்பொழுது நடக்கவேண்டியஸதஸ்ஸுக்காக ஆஹ்வானஸ்ரீமுகம் அனுப்பும்போது திருமேனி அஸ்வாஸ்த்யத்தைத் தெரிவிக்கவேண்டாமென்றும், 'ஸதஸ்ஸிற்கு அவசியம் வரவேண்டும்' என்று மட்டும்எழுதும்படி நியமித்தருளியாயிற்று. அதற்குச் சில வருஷங்களுக்கு முன்பே லிகிதமூலமாகவே தமக்குப் பின் ஸ்ரீ அழகியசிங்கர் இந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டுமென்று ஒரு தஸ்தாவேஜையும் (உயில்) ஏற்படுத்தியாகியிருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த ரஹஸ்யம். இது விஷயத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் உகப்போ வெறுப்போ கொண்டுள்ளதாக அடியேனைப்போன்ற நெருங்கிப் பழக்கம் உள்ளவர்களாலும் கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இப்பொழுதுங்கூட எந்தவிஷயத்திலும் திருவுள்ளத்தை முன்கூட்டித் தெரிந்துகொள்ள முடியவில்லை. இதை குணமாகக் கொண்டாட வேண்டுமானால் 'गंभीरहृदयः' என்றே சொல்லலாம். ஆனால் 'இதைப்பற்றி குணமாகவோ தோஷமாகவோ எடுத்துக்கொள்ள வேண்டாமென்றும், தாம் நடக்கப்போகும் காரியத்தில் ஸ்வதந்த்ரமாக முன் கூட்டி ஒரு நிர்ணயம் பண்ணுவதில்லை என்றும், 'त्वदास्यहेतोस्त्वयि निर्विशङ्कं न्यस्तात्मनां नाथ! बिभर्षि भारम्' என்ற ரீதியில் அப்போதைக்கப்போது அவன் நியமிக்கும் காரியங்களையேதாம்செய்துவருவதாக' ஸ்ரீ அழகியசிங்கர்அடிக்கடி ஸாதித்துக்கொண்டிருக்கிறபடி.

ஆகவே ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் தம்முடைய அஸ்வாஸ்த்யத்தை எழுதினால் திருத்தாயார் முதலியவர்கள் ஒரு ஸமயம் ஆச்ரமாந்தரம் நேரக்கூடும் என்ற பயத்தால் போகவொட்டார்கள். அதையநுஸரித்து வராமல் இருந்துவிடக் கூடும், என்ற திருவுள்ளத்தால் அதை எழுதவேண்டாமென்று நியமித்தாயிற்று. ஸதஸ்ஸோறும் முடிய இருக்கமுடியாமல் நடுவில் திருத்தகப்பனார் திருவத்யயனத்துக்காக ஊருக்குப் போகவேண்டியிருக்கிறபடியால் பத்திரிகை வந்திருந்தாலும் ஸதஸ்ஸுக்குப் போகவேண்டாமென்று திருவுள்ளப்பற்றி இருந்து விட்டபடி. ஆனால் அது ஸமயம் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி பிரபலமான அஸ்வாஸ்த்யத்துடன் இருந்தபடியால் 'தன்னை ஒரு தரம் வந்து பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்றும், ஸதஸ்ஸுக்குப் போகிறபோது இந்த வழியாகவே போகவேண்டு' மென்றும் ஒரு தரத்திற்கு இரண்டு

தரமாக எழுதி 'नोत्तरं वक्तुमर्हसि' என்கிற ஸ்ரீமத்ராமாயண வசனத்தைக் குறிப்பிட்டும், தானே மறுமுறை பார்க்கமுடியாத அவஸ்தை யிலிருப்பதால் அவசியம் வரவேண்டுமென்று மெழுதியிருந்தபடியால் ஸ்ரீரங்கத்திற்கெழுந் தருளியாயிற்று. ஸ்ரீரங்கம் புறப்பட்டுப் போய் அந்த ஸ்வாமியைப் பார்த்தவுடன், அவர் 'ஸ்ரீஸந்நிதிக்கு தனக்காக அவசியம் போய் தன்னுடைய ப்ரணாமங்களையும், விஜ்ஞாபனங்களையும் விஜ்ஞாபனம் செய்யவேண் டும்' என்று சொன்னதை யநுஸரித்து அப்படியே திருவள்ளூருக்கு ஸதஸ் ஆரம்பத்திற் கொரு நாள் முன்னதாகவே எருந்தருளியா யிற்று, அவ்விடம் வந்தபிறகுதான் ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனி பாங்காக இல்லையென்று தெரிந்துகொண்டபடி. பிறகு ஸ்ரீஅழகியசிங் கரை தண்டன் ஸமர்ப்பித்துவிட்டு ஸ்ரீரங்கம் போய் ஸ்ரீபுத்தங்கோட்டகம் ஸ்வாமியைப் பார்த்துவிட்டுவந்த விஷயங்களை விவரமாய் விஜ்ஞாபித்தபோது ஸ்ரீஅழகியசிங்கர், **कार्यं ते मम शासनं' 'नोत्तरं वक्तुमर्हसि' 'सकलभुवनभारः स्थापितो वत्समूर्ध्नि'** என்று ஸாதித்துவிட்டு 'என்னுடைய உடம்பு அஸௌகர்யத்தால் ஸதஸ்ஸில் முழுவதும் இருக்க முடியாது. ஆகையால் தேவர் பூர்ணமாக இருந்து ஸதஸ்ஸை நன்ருக நடத்தவேண்டு'மென்று ஸாதித் தாயிற்று. அந்தப்படியாசு ஸதஸ் ஆரம்பித்து நடந்து வந்தது. ஸ்ரீஅழகியசிங்கர் திருமேனி யிலும் அஸ்வாஸ்த்யம் வர வர அதிகமாகிக் கொண்டே வந்தது. ஆகிலும் அபாயமான நிலைமை ஏற்படுமென்று எதிர்பார்க்கக் கூடியதாக இல்லை. இந்த ஸ்திதியில் ஸதஸ்ஸின் ஐந்தாவது நாள் திருவத்யயனத்தை யுத்தேசித்து ஊருக்குப்போக நியமனம் கேட்ட போது 'இன்னும் இரண்டு நாள் பார்த்துக் கொண்டு போகலா'மென்று ஸாதித்தாயிற்று. பிறகு இரண்டு நாள் கழித்து தம் திருமேனி யினுடைய அசக்தியின் ஆதிக்யத்தினால் 'இப்போதே துரீயாச்ரமத்தைப் பெற்று ஆராத நாதிகளையும் தமக்குப்பின் ஆஸ்தான நிர்வாஹத்தையும் செய்யும்படி தாம் அபிப்ராயப் பட்டிருப்பதால் திருவத்யயனத்தையும் இங்கேயே செய்துவிட்டு ஸதஸ் முடிந்ததும் அந்தப்படியே அங்கீகரிக்கவேணு'மென்று ஸாதித் தாயிற்று.

ஸ்ரீஅழகியசிங்கரின் பூர்வாச்ரம திருமாளிகையில் நடக்கும் வைதிகலௌகிக வ்யவஹாரங்களை நேரில் கண்டும் கேட்டுமிருக்கிற அடியேனைப்போன்றவர்களுக்கெல்லாம் இந்த ஸமயத்தில் இது நடந்தால்தான் நடந்தது. ஊருக்கு எழுந்தருளிவிட்டு அங்கு திருவத்யயனம் பண்ணிவிட்டுப் பிறகு ஆச்ரமஸ்வீகாராதிகளுக்காக எழுந்தருளக்கூடு மென்று எதிர் பார்ப்பது நடக்கக் கூடாத கார்யமென்றே மனத்தில் பட்டது. இதுவிஷயம் ஸ்ரீஅழகிய சிங்கருக்கும் திருவுள்ளத்தில் பட்டபடியால் அந்த ஸ்வாமிக்குத் தெரியாமலேயே திருவத்யயனம் இவ்விடத்திலேயேதான் நடத்தப் போவதாகவும் அவசியம் வரவேணுமென்றும் ஸ்ரீகிராமத்திற்கு தந்தி கொடுக்கும்படி நியமித்தாயிற்று. அந்தப்படி தந்தி கொடுக்கப் பட்டது. அதுவிஷயத்தை மறுநாள் ஸாதிக்கும்படி இருந்தது. 'இது பெரிய க்ஷேத்ரமானதால் ஊரிலிருந்து வேண்டியவர்களை வரும்படி தந்தி கொடுக்கச் சொல்லியிருப்பதாயும் இங்கேயே திருவத்யயனத்தைப் பண்ணலா'மென்றும் ஸாதிக்கும்படியிருந்தது. பிறகு அந்தப்படி திருத்தாயார் தம்பி முதலியவர் வந்து இங்கேயே திருவத்யயனம் நடந்ததும் அதற்கு மூன்றுவது நாள் ஆச்ரமஸ்வீகாராதிகள் நடந்த விஷயமும் எல்லோருக்கும் தெரிந்ததே. அந்த ஸந்தர்ப்பத்தில் கீழ்க்கண்டபடி ஸ்ரீஅழகியசிங்கர் ஸாதிக்கும்படியாக இருந்தது–

'யானொட்டி யென்னு ளிருத்துவ மென்றிலன்
………… ஒட்டுமோ இனி யென்னை நெகிழ்க்
கவே' (திருவாய்மொழி 1-7-7)

என்கிறபடி பெருமாள் நியமனம் இருந்தபடி என்று. இப்படி ஸாதித்துவிட்டு, அதாவது திருவள்ளூருக்கு வருவதாக உத்தேசமில்லாமல் இருந்தவனைக்குறித்து **'नोत्तरं वक्तुमर्हसि'** என்ற ச்லோகத்தை எடுத்து ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீபுத்தங்கோட்டகம் ஸ்வாமி எழுதியதையும், பிறகு ஸ்ரீஅழகியசிங்கர் அதைத் தொடர்ந்து **'कार्यं ते मम शासनं'** என்பதையும் சேர்த்து **'नोत्तरं वक्तुमर्हसि'** என்று ஸாதித்ததையும் ச்லோகங்களின் ப்ரகாணங்களையும் பார்த்தால் பெருமாளுடைய நியமனத்தின் ப்ரகாரம் தெரியவருகிறது.

அதாவது:— உத்தர ஸ்ரீமத்ராமாயணத்தில் பெருமாள் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளுங்காலத்தில் ஸ்ரீவிபீஷணரைக்குறித்து ஸாதித்தவிடம்:—

'विभीषणमथोवाच राक्षसेन्द्रं महायशाः।
यावत्प्रजा धरिष्यन्ति तावत् त्वं वै विभीषण॥
राक्षसेन्द्र महावीर्य लङ्कास्थस्त्वं धरिष्यसि।
यावच्चन्द्रश्च सूर्यश्च यावत्तिष्ठति मेदिनी॥
यावच्च मत्कथा लोके तावद्राज्यं तवास्त्विह।
शा (पि) सितस्त्वं सखित्वेन कार्यं ते मम शासनम्
प्रजाः संरक्ष धर्मेण नोत्तरं वक्तुमर्हसि।
किंचान्यद्वक्तुमिच्छामि राक्षसेन्द्र महामते॥
आराधय जगन्नाथमिक्ष्वाकुकुलदैवतं।
आराधनीयमनिशं सर्वैर्देवैस्सवासवैः॥'

(ராமாயணம் உத்தரகாண்டம் ஸர்கம் 108)

அதாவது:— 'விபீஷணா! நீர் இங்கேயே லங்கையில் இருந்துகொண்டு சந்த்ரஸூர்யாதிகள் உள்ளளவும் தர்மத்தோடு பிரஜாஸம்ரக்ஷணம் பண்ணவேண்டும். ஸகா என்ற முறையிலும் நான் சாஸனம் பண்ணுவதால் அந்த சாஸனத்தை அப்படியே பதில் சொல்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டு, மற்றொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். இக்ஷ்வாகுகுலதைவதமான இந்திரனுள்ளிட்ட ஸகலதேவர்களாலும் ஆராதிக்கப்பட்ட ஜகந்நாதனை (பெரிய பெருமாளை) எப்பொழுதும் ஆராதனம் செய்துகொண்டிரும்' என்று. இதைக்கேட்ட விபீஷணர் ஸ்ரீராமவாக்யத்தை அப்படியே யங்கீகரித்தார் என்னும் விஷயத்தைப் பின் வரும் ச்லோகம் விளக்குகிறது.

'तथेति प्रतिजग्राह रामवाक्यं विभीषणः।
राजा राक्षसमुख्यानां राघवाज्ञामनुस्मरन्॥'

ஸ்ரீவிபீஷணாழ்வானை லங்கையிலேயே இருக்கும்படி முதலில் நியமித்துவிட்டு பிறகு பெரிய பெருமாளாராதனத்தை நியமித்தப்பிரகாரம் முதலில் திருவுள்ளூருக்கு மறு உத்தரம் சொல்லாமல் வரும்படி நியமனம் செய்து பிறகு திருவுள்ளூருக்கு வந்ததும் நம் பெரிய பெருமாள், தன் ஆராதனத்தை ஸ்ரீஅழகிய சிங்கர் மூலம் நியமித்திருப்பதால் '**तथेति**' விபீஷணாழ்வான் சொன்னமாதிரி தமக்கும் சொல்ல ப்ராப்தமாகிறது. அதில் தர்மாதர்மபியா ஆகுலதையை அடைந்தால், அப்படி ஆகுலனான அர்ஜுநனுக்குப் பலபடி உபதேசித்துவிட்டு கடைசியில் கண்டித்துச் சொன்ன ச்லோகங்களில் சொல்லப்பட்ட பகவந்நியமனம், அந்த ச்லோகங்கள் நினைவினால் மனதில் ஸ்புரிக்கிறபடியாலும் அவன் சொன்னபடி '**करिष्ये वचनं तव**' என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. அந்த ச்லோகங்களாவன—

'मच्चित्तस्सर्वदुर्गाणि मत्प्रसादात्तरिष्यसि।
अथचेत् त्वमहङ्कारात् न श्रोष्यसि विनङ्क्ष्यसि॥
यद्यहङ्कारमाश्रित्य न योत्स्य इति मन्यसे।
मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति॥
स्वभावजेन कौन्तेय निबद्धस्स्वेन कर्मणा।
कर्तुं नेच्छसि यन्मोहात्करिष्यस्यवशोऽपि तत्॥
तमेव शरणङ्गच्छ सर्वभावेन' என்று.

இந்த இடத்தில் பாஷ்யத்தைக் கவனிக்கவேணுமென்றும் ஸாதிக்கும்படி இருந்தது. '**तमेव सर्वस्य प्रशासितारं त्वत्सारथ्ये अवस्थितं 'इत्थङ्कुरु' इति च शासितारं, सर्वभावेन- सर्वात्मना, शरणङ्गच्छ- अनुवर्तस्व। अन्यापि तन्मायाप्रेरितेन अज्ञेन त्वया युद्धादिकमवर्जनीयं, तथासति नष्टो भविष्यसि। अतस्तदुक्तप्रकारेण युद्धादिकं कुरु इत्यर्थः। एवं कुर्वाणः तत्प्रसादात् परां शान्तिं सर्वकर्मबन्धोपशमं शाश्वतं च स्थानं प्राप्स्यसि।**' இந்த பங்க்தியைப் பராமர்சித்தால் மனோரதஸாரதியான எம்பெருமான் நியமனத்தை ஸர்வாத்மனா அநுவர்த்திப்பதுதான் அநிஷ்டநிவ்ருத்திபூர்வக இஷ்டப்ராப்திஹேதுவென்றும், அதில் தர்மாதர்மவிமர்சம் பண்ணுதலோ அதை மறுப்பதோ உசிதமல்லவென்று தன்விஷயமாக உபதேசிப்பதுபோல் காதில் ஒலிப்பதுபோல் இருப்பதாலும் அதனாலும் அங்கீகரித்ததாக ஸாதிக்கும்படி இருந்தது.

அத்துடன் கிருஹஸ்திதியிலிருந்து வனஸ்திதிக்கு எழுந்தருளுகிற பெருமாளை த்வரை பண்ணுகிற கைகேயியைக் குறித்து '**यावन्मातरमापृच्छे सीतां चानुनयाम्यहं। ततोऽद्यैव गमिष्यामि**' என்றபடி தாம் அவகாசம் கேட்டுக்கொள்ளவேணுமென்று ஆசைப்படாதிருந்தபோதிலும் லோகத்தில் அம்மாதிரி செய்யாமலிருந்தால் ஒரு சொல்லுக்கு இடமுண்டாகக் கூடுமென்பதையும் கணிசித்து ஸர்வதா(**था**)ஸர்வதா(I)ஹிதகாரியாய் ஹ்ருதயே ச வாஸியான

ஸர்வேச்வரனான லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அவர்களையும் வரவழைத்து அவர்களுக்குத் தெரிந்தே கிருஹஸ்திதியை விட்டான் என்னும்படி பண்ணியருளினான்' என்றும் ஸாதித்தாயிற்று.

அந்தவாஸநாதிசயத்தாலேயே பிரியாதாட்செய் என்கிற பாசுரத்தைப் பொருத்தமாக அநுஸந்தித்து வருவதுடன் அதை இப்பொழுது காலக்ஷேப கோஷ்டியிலும் ஸாதிக்கும்படி இருந்தது என்று எண்ணி உளம் மகிழ்ந்தேன்.

மேல்கண்ட ஸ்ரீமத்ராமாயண ச்லோகத்துக்குஒப்பவே ஸ்ரீஅழகியசிங்கர் ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டதைப் பற்றி விசேஷஜ்ஞர் **'रामप्रव्राजनं ह्येतत्सुखोदर्कं भविष्यति'** என்று பாரத்வாஜர் வார்த்தைப்படி (கௌஸல்யாதிகளுக்குப்போலே, சிலருக்கு துக்காவஹமாகவே இருந்தாலும்) ஸர்வ ஜனங்களுக்கும் **'देवानां दानवानां च ऋषीणां भावितात्मनां। हितमेव भविष्यत् हि रामप्रव्राजनादिह'** என்றபடி ஹிதகரமாகவே இருக்கும் என்று சொன்னார்கள். ஸ்ரீஅழகியசிங்கர் ஆச்ரமஸ்வீகாரத்தை அங்கீகரித்துக்கொண்டு மேல் தததநுகுணமான கார்யங்கள் ஆரம்பிக்கப்போகும் ஸமயத்தில் ஸ்ரீஅழகியசிங்கருடைய பூர்வாச்ரம ப்ராதாவான ஸ்ரீவீரராகவாசார்ய ஸ்வாமி தன் ஸஹோதரியுடன் வந்து ஸ்ரீஅழகியசிங்கர் ஸன்னிதியில் அநேகாவ்ருத்தி தண்டன் ஸமர்ப்பித்து, 'இப்பொழுது குடும்பம் இருக்கும் நிலைமையில் குடும்பத்திலிருந்து (கிருஹத்திலிருந்து) வெளியேற்றப் படுவது உசிதமில்லை' என்று ரொம்பவும் ப்ரார்த்தித்தார். அதற்கு ஸ்ரீபெரிய அழகியசிங்கர் 'நான் நிர்த்தாரணம் செய்து மேல் கார்யங்களை நடத்த நியமனம் செய்து கார்யங்களும் ஆரம்பிக்கும் ஸமயத்தில் என்றால் நிறுத்தச் சொல்ல முடியாது. உங்கள் தமையனை ப்ரார்த்தித்து அவர் வேண்டாமென்று சொன்னால் நிறுத்திவிடும்' என்று ரொம்ப சாதுர்யமாக ஸமாதானம் ஸாதித்தாயிற்று. அதை யவலம்பித்து அவரும் வந்து ஸ்ரீஅழகியசிங்கரைப் பலபடியாகப் பிரார்த்தித்து 'இப்போது இதை நிறுத்திவிட்டு ஊருக்கு எழுந்தருளவேணும். பிறகு வேண்டுமானால் கொஞ்சகாலம் கழித்துச் செய்துகொள்ளலாம். இப்பொழுது ஸ்ரீபெரிய அழகியசிங்கர் திருமேனிக்கு ஒன்றும் அவத்யமில்லையென்றும் விஜ்ஞாபித்தார். அதற்கு ஸ்ரீஅழகியசிங்கர் **'करिष्ये वचनं तव'** என்று ஒப்புக்கொண்டிருப்பதால் அதற்கு மாறாகச் சொல்லமுடியாது என்றும், ஸந்யாஸம் பண்ணிக்கொள்வதாக மனஸில் ஸங்கல்பித்துக்கொண்ட பிற்பாடு அதில் நின்றும் மீளுவது சாஸ்த்ர நிஷித்தமென்றும் ஸாதிக்கும்படியிருந்தது. இதிலிருந்து அப்பொழுது ஸந்நிஹிதர்களாக இருந்த எங்களுக்கு சித்ரகூட வ்ருத்தாந்தம் நினைவிற்கு வந்தது.

இப்போது ஸ்ரீஅழகியசிங்கர் காலக்ஷேப கோஷ்டியில் அந்தப் பாசுரத்தை ஸ்வாநுஸந்தானவிஷயமாக யோஜித்து ஸாதித்ததும் ஐந்து வருஷத்திற்கு முன் நடந்த விஷயங்கள் கண்முன் நிற்பதுபோல (அப்போது அதில் முக்யப் பங்கெடுத்துக்கொண்ட) அடியேனுக்குத் தோன்றிய படியால் அதை முழுதும் வெளியிடும்படி நேர்ந்தது. அடியேன் பெயரைக்கொண்டு இப்போது அதைப் பெருமாள் வெளியிட்டருளினார்.

இம்மாத அட்டையில் அச்சிட திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ப்ளாக்கைக் கொடுத்துதவிய "பக்தன்" பத்திரிகை ஆசிரியருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

12-8-56 தினம் ஸ்வாதி 25-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம். 'பொதுவாக ஸ்வாதிக்கு விசேஷமிருந்தாலும் இந்த மாஸ ஸ்வாதி பெரியபெருமாள் (லக்ஷ்மீந்ருஸிம்ஹன்) திருநக்ஷத்திரம், பெரிய திருவடி திருநக்ஷத்திரம், பெரியாழ்வார் திருநக்ஷத்திரம், பெரிய ஸ்வாமி திருநக்ஷத்திரம் என்று சொல்லக்கூடிய ஏற்றமுண்டென்று' ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் ஸாதிக்கும்படியிருக்குமாம் என்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிக்கும்படியாயிருந்தது. அன்று பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சனமும் ஸேவை பாராயணம் தொடக்கமாகி சாற்றுமுறையும் ஸம்பாவனையும் கோஷ்டியும் நடந்தது. 16, 17, 18ந்தேதி மூன்றுநாட்கள் ஸ்ரீ கத்வால் ராஜா ததீயாராதனையையும் பண்ணிவைத்து பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டுப்போனர். 17-8-56 அவருடைய பந்துக்களில் ஒருவர் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். 19-8-56 மத்யாஹ்னம் சந்தன தாம்பூலகோஷ்டி முடிந்ததும் ஸ்ரீ அழகியசிங்கர் கீழ்க்கண்டபடி ஸாதித்தாயிற்று. 'இன்று மத்யாஹ்ன ஆராதனகாலத்தில் பெருமாள் ஸந்நிதிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளும்போது கிராப் அதிகமாகப் பரவி வருவதைத்தடுப்பதற்காக நினைத்துக்கொண்டே போகிற காலத்தில் கிராப்புடன் செய்யப்படும் உபநயந விவாஹாதிகளையுத்தேசித்து ஸ்ரீஸந்நிதியிலிருந்து மாலை, பல மந்த்ராக்ஷதையுடன் மனுஷ்யாளை அனுப்புவது எதற்காக? கிராப் இல்லையென்று ப்ரார்த்தித்தால்தான் மாலை மனுஷ்யாள் அனுப்புவது உசிதம். கிராப் தலையுள்ளவர்களுக்கு ஸ்ரீசடாரி ஸமாச்ரயணம் முதலியது இல்லை என்றரீதியில் இந்த நிர்ப்பந்தத்தையும் வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமில்லையா என்றும் எண்ணம் உதித்து பெருமாளை நிமிர்ந்து பார்த்த காலத்தில் 'கொள்வன் நான்' என்று பெருமாள் அருளிச்செய்வது போல் இருந்தது என்று தாக்குப் பட்டதாயும் அதையே பகவந்நியமனமாக அங்கீகரித்து திருவுள்ளம்பற்றினதாகவும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்தாயிற்று. அன்று காலையில்தான் காலக்ஷேபத்தில் 3-ம் பத்து 8-வது திருவாய்மொழி 9-வது பாட்டான 'கோள்வன் நான்' என்கிற பாசுரம் நடந்தது. அதன்படி உன்னுடைய அபிப்ராயத்தை நான் கொள்வன்—அங்கீகரிப்பன் என்று பொருள் தமக்குப் பட்டதாகவும் ஸாதித்துவிட்டு அம்மாதிரி கல்யாணங்களில் ஸ்ரீஸந்நிதியிலிருந்து ஸ்ரீ ஸந்நிதி மனுஷ்யாள் நேரிடப்போவது ஸ்ரீஸந்நிதிப்ரதிநிதிஹோதாவிலாகையால் ஸ்ரீஸந்நிதி சார்பில் அதை ஆமோதித்து அல்லது அங்கீகரித்து இருப்பதாக ஏற்படுமாதலால் அப்படிச் செய்யவேண்டாமென்று திருவுள்ளம் பற்றினதாகவும் (அதாவது அதை நேரில் கண்டு அதில் கலந்துகொண்டதாக ஆகக்கூடாது என்றும்) பத்திரிகை அனுப்பினதற்காக பல மந்த்ராக்ஷதை மட்டில் தபாலில், அநுக்ரஹித்து அனுப்புவது உசிதமென்றும் அதன் மூலமாகவாவது அவர்களுக்கு ஆசாரச்ரத்தை உண்டாகட்டும் என்கிற அபிஸந்திதான் அதற்குக் காரணம்" என்றும் ஸாதித்தருளியாயிற்று.

21, 22ந்தேதிகளில் உபாகர்மா, காயத்ரீ ஜபங்கள் ஸ்ரீஸந்நிதியில் நடக்கும் வழக்கப்படி நடந்தது. 29-8-56 ஸ்ரீஜயந்தியன்று காலையில் பெருமாளுக்கும் கண்ணனுக்கும் திருமஞ்சனமாகி ராத்ரி டோலை உத்ஸவமாகி, டோலை நடக்கும்போது ஸ்ரீபாகவதம் ஸேவிக்கும்போது ஸ்ரீ அழகியசிங்கர் விசேஷார்த்தங்கள் ஸாதிக்கும்படி இருந்தது. அந்தந்த கட்டங்களில் துராசாரங்களை ஒழிக்கவேண்டிய ஆவச்யகதையைப்பற்றி ஸூசிக்கப்பட்டிருக்கும் விஷயங்களை விவரமாக எடுத்து ஸாதித்தா

யிற்று. க்ரமமாக ராத்திரி ஆராதனமாகி கோஷ்டி ததீயாராதனை நடந்தது. அன்று டோலையை ஸ்ரீஸந்நிதிக்குத் தயிர் கொடுத்து வரும் வியாபாரி நடத்திவைத்தான். பெருமாள் அவன் புத்தியில் தோன்றப் பண்ணி டோலையை நடத்திவைத்துக் கொண்டதும் அவதாரத்தில் காட்டிய ஸௌசீல்யத்தின் நினைவு நமக்கு உண்டாவதற்காக என்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்தபடியாக விருந்தது. 2-9-56 த்வாதசி யன்று செகந்தராபாத் அட்வகேட் ஸ்ரீ ராமசாமி ஐயங்காரும் அவருடைய பார்யாள் ரங்கநாயகி அம்மாளும் பூர்ண ஆராதனமாக நடத்தி வைத்து ராத்ரி டோலோத்ஸவமும் நடத்திவைத்தார்கள். 7-9-56ல் ஆத்மகூர் ராஜகுடும்பத்தார் பெரிய திருமஞ்சனம் பண்ணிவைத்தார்கள். 9-9-56ல் க்ரமமாக ஸ்வாதி திருமஞ்சனம் நடந்தது. போன ஸங்கல்ப காலத்தில் ஏற்கனவே கைவசமுள்ள 10 பவுனிலிருந்து தங்க உத்தரணிகள் செய்யப்பட்டு அபிமான ஆராதனத்திற்குள்ள எல்லாவட்டில்களுக்கும் தனித்தனி உத்தரிணிகளாகச் செய்து வைக்கப்பட்டது. திருவனந்தபுரம் மஹாராஜா முதலியவர்களால் ஸமர்ப்பிக்கப்பட்ட பவுன்களைக்கொண்டு பெருமாளுக்கு திருமஞ்சன ஸஹஸ்ரதாரைத்தட்டு செய்யும்படி கொடுத்திருந்தது முதல் நாள் வந்து சேர்ந்தபடியால் ஸ்வாதி திருமஞ்சனம் அதில் கண்டருளினர். பம்பாயிலிருந்து பம்பாயிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் சார்பில் ஸ்ரீ என். சடகோபாசாரியர் வந்து பம்பாய்க்கு அவசியம் எழுந்தருளவேணுமென்றும் கார்த்திகை மாதம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் பம்பாயில் நடத்தவேண்டுமென்று எல்லோரும் ஆஸ்தைப்படுவதால் அந்தப்படி அங்கீகரித்து எழுந்தருளவேணு'மென்றும் ப்ரார்த்தித்தார். மார்க்கவிவரங்களையும் தெரிவித்து மற்றபடி தங்களாலான ஸௌகர்யங்களையும் செய்ய ஸித்தமாகவிருப்பதாகவும் விஜ்ஞாபித்தார். எல்லா ஸௌகர்யங்களும் நேர்ந்தால் எழுந்தருளுவதாக ஸாதித்தப்படி யிருந்தது.

உத்தானத்திற்கு (புரட்டாசிமீ 5ந் தேதி ராத்ரி) பஞ்சராஹில்ஸில் வசதியான இடம் இருக்கிறதாயும், அங்கு எழுந்தருளவேண்டுமென்று ஸ்ரீமான் நரஸிம்ம ஐயங்கார் முதலியவர்கள் ப்ரார்த்தித்திருக்கிறபடியால் அந்தப்படி திருவுள்ளம்பற்றியாகியிருக்கிறது.

(தொடரும்)

—ஃ—

செய்திகளின் தொடர்ச்சி:—

குடந்தையில் ஸ்ரீ அஹோபில மடத்து வித்வானுக்குப் பாராட்டு.

சென்ற ஓராண்டாக ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தின் பேரில் இந்நகர் மேட்டுத்தெரு அடியேனுடைய க்ருஹத்தில் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்துவந்த பெருக்காரணை ஸ்ரீ. உ.வே. வித்வான் ஸாரஸாரஜ்ஞ சக்ரவர்த்தியாசாரியர் ஸ்வாமிக்கு, அக்கிரந்த பூர்த்திதினமாகிய 9-7-56 திங்கட்கிழமையன்று ஒரு பாராட்டு நடத்தப்பெற்றது. அவ்வமயம் ஒரு பரிஷத் ஸ்ரீ சின்னமு ஸ்ரீநிவாஸ பாட்ராசாரியர் ஸ்வாமி தலைமையில் கூட்டப்பட்டது. கடைசி ப்ரஹ்மஸூத்ரத்தை உபந்யாஸகர் நன்கு எடுத்துரைத்தார். அதைக் கேட்டுத் தலைவர், ஸ்ரீசக்ரவர்த்தியாசாரியரைப்பற்றி அவர் மேதையை மெச்சியும், அவர் 42, 43 பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்களின் அநுக்ரஹத்திற்கு மிகவும் பாத்ரபூதரென்றும், ஸ்ரீபாஷ்யத்தில் அவருக்கு த்ருடமான ப்ரஜ்ஞை என்றும் கொண்டாடினர். பிறகு ஸ்ரீ எஸ். ஆர், ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீ முடும்பை ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியோர் ஸ்வாமியின் திருக்கல்யாணகுணங்களை எடுத்துக்கூறினர். முடிவில் எழுந்தருளியிருந்த வித்வான்களுக்கு ஸம்பாவனையும், கோஷ்டிக்கு பழம் தாம்பூலம் வழங்கப்பட்டு வித்வத் பரிஷத் கலைந்தது.

புரிசை கே. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர்.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ௵ தக்ஷிணாயனம் வர்ஷ ருது கந்யா ௴; **1956** ஸெப்டம்பர் - அக்டோபர் ௴]

16-9-56	புரட்டாசி ௴ *1*உ	ஞாயிற்றுக்கிழமை	கந்யாரவி *26-44*; ஷடசீதி ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி, ச்ரவணத்வாதசி.
19-9-56	*4*உ	புதன்கிழமை	○பூர்ணிமை.
23-9-56	*8*உ	ஞாயிற்றுக்கிழமை	மஹாபரணி.
27-9-56	*12*உ	வியாழக்கிழமை	மத்யாஷ்டமி.
30-9-56	*15*உ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி, ஆயில்யம், *18*-வது பட்டம் ஸ்ரீமந்நாராயணசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
1-10-56	*16*உ	திங்கட்கிழமை	த்வாதசி திதி, ஸந்யஸ்தமஹாளயம்.
2-10-56	*17*உ	செவ்வாய்க்கிழமை	த்ரயோதசி - சதுர்தசி திதித்வயம், சஸ்த்ர-ஹத மஹாளயம், பூரம், *12*-வதுபட்டம் ஸ்ரீமந்நாரயணசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
3-10-56	*18*உ	புதன்கிழமை	● மஹாளய அமாவாஸ்யை.
5-10-56	*20*உ	வெள்ளிக்கிழமை	நவராத்ரி ஆரம்பம்.
7-10-56	*22*உ	ஞாயிற்றுக்கிழமை	விசாகம், *33*-வது பட்டம் ஸ்ரீ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
9-10-56	*24*உ	செவ்வாய்க்கிழமை	திருக்கேட்டை; ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
10-10-56	*25*உ	புதன்கிழமை	மூலம், *20*-வதுபட்டம் ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
11-10-56	*26*உ	வியாழக்கிழமை	அஷ்டமிதிதி.
12-10-56	*27*உ	வெள்ளிக்கிழமை	அதிதி.
13-10-56	*28*உ	சனிக்கிழமை	நவமி திதி, மஹாநவமி, திருவோணம், ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
14-10-56	*29*உ	ஞாயிற்றுக்கிழமை	விஜயதசமி.
15-10-56	*30*உ	திங்கட்கிழமை	ஏகாதசி.
16-10-56	*31*உ	செவ்வாய்க்கிழமை	கன்யாசுக்ல த்வாதசிதிதி, துலாரவி *54-6*.

[தக்ஷிணாயனம் சரத் ருது - துலா ௴]

17-10-56	ஐப்பசி ௴ *1*உ	புதன்கிழமை	துலாவிஷு; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
19-10-56	*3*உ	வெள்ளிக்கிழமை	○பூர்ணிமை.
25-10-56	*9*உ	வியாழக்கிழமை	ஷஷ்டி - ஸப்தமி திதித்வயம்.
26-10-56	*10*உ	வெள்ளிக்கிழமை	அஷ்டமி திதி.
29-10-56	*13*உ	திங்கட்கிழமை	ஏகாதசிதிதி.
30-10-56	*14*உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசிவ்ரதம்.
31-10-56	*15*உ	புதன்கிழமை	ராத்ரி நரகசதுர்தசி ஸ்நாநம்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸாரபோதிநீ

(இரண்டாவது பாகம்)

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸார போதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீஅஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் அருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். ஸித்தோபாயசோதநாதிகாரம் முதற்கொண்டு நிகமநாதிகாரபர்யந்தமான இந்த இரண்டாவது பாகம் மன்மத வருஷம் தை மாதம் உத்திராடத்திருநன்னாளில் வெளியாகியிருக்கிறது. இந்த பாகமும் உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை வருமாறு:—

(Full) புல் காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய்	6-8-0
(Half) ஆப்காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய்	6-0-0
(Wrapper) ராப்பர் பயிண்டு புத்தகம்	ரூபாய்	5-8-0

புஸ்தகத்தை அபேக்ஷிக்கும் ஆஸ்திகர்களனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவரபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர். (செங்கல்பட்டு ஜில்லா)

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணா தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிட்டே அனுப்பவேண்டும். புத்தகம் வேண்டியவர்கள் அதன் விலையில் பாதியையாவது முன்பணமாக அனுப்பினால் வி. பி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.